ISSN: 2012 - 6352

# தொண்டன்

ஆரம்பம் 1969 பெப்ரவரி

சமய - சமூக - இலக்கிய வெளியீடு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

ஜூன் – 2013

மலர் - 45 இதழ் - 05


- **ஆசிரியர்**
  லெஸ்லி ஜெயகாந்தன்
- **இணை ஆசிரியர்**
  மலர்வேந்தன்
- **துணை ஆசிரியர்கள்**
  மெற்றில்டா இராஜேந்திரம்
  பெஸ்லீயோ வாஸ்
  பைந்தமிழ்க்குமரன் டேவிட்
- **ஆலோசகர்**
  A.G.இராஜேந்திரம்
- **கணினி வடிவமைப்பு**
  சுபாஜெனி சங்கர்
- **வெளியீடு**
  சமூகத் தொடர்பு நிலையம்.
  திரு/மட். மறை மாவட்டம்
- **முகவரி**
  சமூகத் தொடர்பு நிலையம்
  அ.பெ.எண் – 44
  மட்டக்களப்பு.
- **பதிப்பகம்**
  வணசிங்கா அச்சகம்
  மட்டக்களப்பு.


## உள்ளே....




அன்புடன் உங்களோடு ............. 01
நம்பிக்கையின் அடிநாதம் ......... 02
கடுகுக் கதை ........................... 04
அருள்தந்தை சந்திரா ............... 05
நம்பிக்கையில்லாத வாழ்வு ........ 07
இலக்கிய மஞ்சரி ..................... 10
இயேசுவின் திருவுடல் ............... 11
சகானா ................................. 12
வாழ்க்கைக்கு ........................ 13
நவீன நரிக் கதைகள் ............... 14
மாணவர் பக்கம் ...................... 16
தமிழில் கிறிஸ்தவ .................. 17
முகமூடி ................................. 19
ஈழத்தின் புகழ்பூத்த ................. 20
அச்சுவாகனம் ஏறிய முதல் ....... 23
புனிதர்களை அறிவோம் ........... 25
விவிலியம் கற்போம் ................ 27
அறிவை வளர்ப்போம் .............. 28


ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ-ர்)


**SOCIAL COMMUNICATIONS CENTRE**
P. O. BOX - 44
BATTICALOA.
TEL: 065 - 2226486
E.mail: scctribatti@gmail.com



விலை : 30/=
ஆண்டு சந்தா : 500/=
(தபாற் செலவு உட்பட)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# அன்புடன் உங்களோடு...!

**வா**ழ்வை இனிதாக்குவது அன்பு
வாழ்க்கையை சுவையாக்குவது அன்பு
அழகற்றதை அழகுள்ளதாக்குவது அன்பு
தடுமாற்றத்தை அமைதியாக்குவது அன்பு
நம்பிக்கையைவிடச் சிறந்தது அன்பு
இயற்கையைத் தொடவைப்பது அன்பு
இறைவனை அடையவைப்பது அன்பு

இறைவனை நாம் உறுதியாகப் பற்றிக்கொள்ளவேண்டும். அப்பொழுது நமக்கு மதிப்பு உண்டு. இல்லையென்றால் வாழ்க்கை பூச்சியமாகும்.

With You I am Hero: Without You I am Zero.

நாம் நிலை வாழ்வு பெறவேண்டும் என்பதற்காக நம்மோடு வாழ இயேசுவினால் உருவாக்கப்பட்ட அற்புதமான வழிதான் நற்கருணை.

எந்த மனிதனும் இறந்த பின் இன்னொரு மனிதனுடன் வாழ்வதில்லை. ஆனால், ஆண்டவர் இயேசுக் கிறிஸ்து அப்ப வடிவில் நம்மோடு உள்ளார். தனது உடலை உண்ணவும் இரத்தத்தைக் குடிக்கவும் கொடுக்கின்றார். இந்த உன்னதமான வழியால் இறைவன் நம்மோடு குடிகொண்டுள்ளார். இந்த உணவை உண்போர்க்குப் பசியே இராது.

“விண்ணகத்திலிருந்து இறங்கிவந்த வாழ்வுதரும் உணவு நானே” என்று ஆண்டவர் இயேசு கூறுகின்றார். தொடக்ககால கிறிஸ்தவர்கள் ஒன்றுகூடிய போதெல்லாம் அப்பம் பிட்டனர்.

நற்கருணை இன்றி திருச்சபை இல்லை
திருச்சபை இன்றி நற்கருணை இல்லை.

VAT. II கூறுகின்றது,

நற்கருணைதான் திருச்சபையின் வாழ்வின் ஊற்றும் உச்சியுமாகும்.

“எனது சதையை உண்டு எனது இரத்தத்தை குடிப்பவர் என்னோடு இணைந்திருப்பர்”

இயேசுவை உணவாக உட்கொள்கின்றபொழுது நாம் நிலைவாழ்வு பெறுகின்றோம். ஒவ்வொரு திருப்பலியிலும் குருவானவர் மறு கிறிஸ்துவாக நின்று இதனை நினைவூட்டுகின்றார்.

நற்கருணைக் கொண்டாட்டத்தின் மூலம் கிறிஸ்து நம்மைவிட்டுத் தூரமாக இல்லை, மாறாக நம்மோடு இருக்கிறார் என்பதை வெளிப்படுத்துகிறார். இதை நாம் உணர்வதில்லை.

கிறிஸ்து அவனிக்கு வந்தபோது, மனிதர்கள் அனைவரையும் அன்புசெய்தார். அவர் அன்பு தன்னலமற்றது, உயர்வானது, விசாலமானது, விசுவாசமானது. எதையும் எதிர்பாராத அன்பாய் இருந்தது.

அப்ப இரசத்தின் வழியாக நற்கருணையாய் மாறி தன்னையே முழுவதுமாய் நமக்குத் தந்து தம் அன்பை வெளிப்படுத்துகின்றார். அந்த நற்கருணை நமக்கு ஆன்ம உணவாகின்றது. அது நம்மைத் தேற்றுகின்றது.

இன்று அரசு ஏற்படுத்துகின்ற அதிரடி மாற்றங்களினால், மக்களின் சுமை அதிகரிக்கின்றது. மக்களின் வாழ்க்கையை ஒளிமயமாக்க வேண்டிய அரசே மக்களை இருளுக்குள் தள்ளுகின்றது. ஏழை மக்களின் வாழ்க்கைத் தரத்தை சல்லடை போட்டு ஒரு காட்சிப் பொருளாக்கி, மக்கள் படும் பாட்டைப் பார்த்துக் குதூகலிக்கின்றது. இங்கு மீண்டும் ஒரு நீரோ மன்னனா...?

“பிறர் துன்பத்தில் கண்ணீர் சிந்துபவனே தலைவன்”. பணி செய்வதே ஒரு தலைவனின் கடமை. இப்படிப்பட்ட தலைவர்களே நாட்டிற்குத் தேவை!

● ஆசிரியர்

இதயமொழி

“எனது சதை உண்மையான உணவு; எனது இரத்தம் உண்மையான பானம். எனது சதையை உண்டு எனது இரத்தத்தை குடிப்போர் என்னோடு இணைந்திருப்பர்; நானும் அவர்களோடு இணைந்திருப்பேன்” (யோவா 6:55-56)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நம்பிக்கையின் அடிநாதம் குடும்பம்!

அருட்தந்தை
கிளமெண்ட் V. அன்னதாஸ்



குடும்பம் இன்று பலவாறு வர்ணிக்கப்படுகின்றது. குடும்பம் ஓர் அன்புக் களஞ்சியம். குடும்பம் நன் மக்களை உருவாக்கும் பயிற்சிப் பாசறை. குணக்குன்றுகளின் இருப்பிடம். முழுமையான மனிதனை உருவாக்கும் பல்கலைக்கழகம். ஒளிமயமான சமுதாயத்தின் அடித்தளம் என்று போற்றப்படுகின்றது. குடும்பம் மனிதரைப் புனிதராக்கும். தீயோரைத் தூயவராக்கும். குவலயத்தை இறைவனின் கோயிலாக்கும்.

**நம்பிக்கையின் அடிநாதம் குடும்பம்** என்ற கருப்பொருளில் சிந்தித்தால் நம்பிக்கையின், நீளம், அகலம், உயரம், ஆழம் என்பதனைத் தீர்மானிப்பது குடும்பமாகவே அமைகின்றது. ஓர் ஆசிரியர் மாணவனைப் பார்த்து,

“உனது அப்பா பெயர் என்ன?” என்று கேட்டார். உடனே மாணவன் “எங்க அப்பா பெயர் பிசாசு” என்றான்.

“சரி உங்க அம்மா பெயர் என்ன?” என்று கேட்க,

“எங்க அம்மா பெயர் சனியன்” என்றான்.

ஆத்திரம் அடைந்த ஆசிரியர் மாணவனை அடிக்க பிரம்பை எடுத்த போது மாணவன் கண்ணீரோடு சொன்னான், “எனது அப்பாவும் அம்மாவும் அடிக்கடி சண்டை போடுவார்கள். சண்டை போட ஆரம்பித்தால் எனது அம்மா அப்பாவைப் பிசாசு என்றும், அப்பா அம்மாவைச் சனியன் என்றுந்தான் ஒருவரை ஒருவர் அழைத்துக் கொள்வார்கள். மனதில் மகிழ்ச்சியே இல்லை” என்று கூறி விம்மி விம்மி அழத் தொடங்கி விடுகிறான்.

தேனுக்கு மலர் பாதுகாப்பு, மலருக்குத் தென்றல் பாதுகாப்பு, நல்ல பிள்ளைகளுக்கு நல்ல பெற்றோரே பாதுகாப்பு. வேதவசனம் மத்தேயு 7: 16 கூறுகின்றது, “அவர்களின் கனிகளைக் கொண்டே அவர்களை அறிந்து கொள்வீர்கள். முட்செடிகளில் திராட்சைப் பழங்களையோ முட்புதரில் அத்திப் பூக்களையோ பறிப்பாருண்டோ”. பெற்றோர் எவ்வழியோ பிள்ளைகளும் அவ்வழியே! நம்பிக்கை வாழ்வின் ஆரம்பம் குடும்பமே. குடும்பம் நம்பிக்கையின் அச்சு என்றால் பிள்ளை அதன் வார்ப்பு. குடும்பம் நம்பிக்கையின் மரம் என்றால் பிள்ளை அதன் கனியாகும்.

உளவியலாளர்களின் கருத்துப்படி பெற்றோரின் சில இயல்புகள் பரம்பரையில் பதிந்து விடுகின்றன. பரம்பரைக்கு ஒன்றும் பரவாவிட்டாலும் சர்க்கரை வியாதியாவது இன்று பரவிவிடுகின்றது. அண்மைய ஆய்வுகளின்படி யாராவது ஒருவர் கொலை செய்தால், அது அவன் செய்த கொலையல்ல, அவனுடைய பரம்பரையில் யாராவது கொலை செய்து பழக்கப்பட்டிருக்க வேண்டும் என்கிறார்கள் உளவியல் ஆய்வாளர்கள். இது பெற்றோரின் 'மரபணுவிலிருந்து' *(Gene:*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



unit of hereditary information that occupies a fixed position on a chromosone) பரவுகின்றது என்கிறார்கள். சிலரு டைய பழக்கவழக்கங்கள், சிந்தனைகள் பரம்பரை பரம்பரையாகப் பரவுகின்றது. 'அப்பா சிகரெட் பிடித்து வட்ட வட்டமாகப் புகை விட்டால் மகன் சிகரெட் பிடித்து மாவட்டம் மாவட்டமாக புகை விடுவான்' என்கிறது இந்தக்கருத்து.

பெற்றோர்கள் நம்பிக்கையின் வழிகாட்டி களாக இருந்தால் பிள்ளைகளும் நம்பிக்கையின் வழித்தடங்களைப் பின்தொடர்வார்கள். ஆக, பெற் றோர்கள் நம்பிக்கையின் கதாபாத்திரங்களாக வாழ வேண்டும்.

"கலைகளிலெல்லாம் சிறந்த கலை பிள்ளை களை நன்றாக வளர்க்கும் கலை" என்று 13ம் சிங்கராயர் திருத்தந்தை கூறினார். பெற்றோர் நம்பிக்கையின் நங்கூரங்களாகயிருந்து நம்பிக்கை வாழ்வில் பிள்ளைகள் ஆடாது அசையாது வாழ வழிநடத்த வேண்டும். நம்பிக்கை பற்றிய பாடல் வரிகள் இவ்வாறு அமைந்துள்ளது.

"அப்பா என்ற நம்பிக்கை கூட அம்மா கொடுத்த நம்பிக்கை

ஆண்டவன் என்ற கற்பனை கூட அச்சம் கொடுத்த நம்பிக்கை

அடுத்த வருடம் மழைவரும் என்பது உழவன் கொண்ட நம்பிக்கை

ஓடி ஆடி ஓயும்போது ஊன்று கோலின்மீது நம்பிக்கை"

பிள்ளைகள் என்ற செல்வம் பெற்ற பெற்றோர்கள், ஊட்ட வேண்டியது ஆண்டவர் மீது நம்பிக்கை.

திருமண வீடுகள், மங்களகரமான நிகழ்வுகளில் வீட்டு வாசலில் தென்னங்குலைகள் கட்டப்படும். சில இடங்களில் வாழைக்குலைகள் கட்டப்படும். இன்னும் சில இடங்களில் பாக்கு, குலை குலையாகக் கட்டப் படும். ஏன் இந்தக் குலை குலையாக அலங்காரம்? சந்ததி பெருகவேண்டும். மங்கள நிகழ்வுகள் நிகழவேண்டும் என்ற நோக்கம் இதன் பின்னணியில் உள்ளது. இன்று நமது சமூகத்தில் குலைகுலையாக அல்ல கொலை கொலை யாக நடக்கின்றது. *"Why this* கொலைவெறி...?" செங்கலடியில் பெற்றோர் பரிதாபமாகக் கொலைசெய்யப் பட்ட நிகழ்வு கொலைவெறிச் சமூகம் ஒன்று உருவாகி வருகின்றது என்பதை வெளிப்படுத்தியுள்ளது. இது குடும் பத்தில் பெற்றோருக்கு ஓர் எச்சரிக்கை.

பிள்ளைகளைத் திருத்த வேண்டிய வேளையில் திருத்தி நம்பிக்கையின் அடிநாதமாகச் செயற்பட வேண்டியவர்கள் பெற்றோர்களே.

அன்று இஸ்ரேல் மக்கள் குடும்பம் குடும்பமாகச் செபக்கூடங்களுக்குச் சென்று இறைவனைத் தொழுதார் கள், புகழ்ந்தார்கள், நன்றி கூறினார்கள். வரலாற்றைப் புரட்டிப்பார்க்கும்போது, கி.மு. 587 இல் ஜெருசலேம் ஆலயம் அழிக்கப்பட்டது. யூதர்கள் நாடு கடத்தப்பட் டார்கள். ஆலயங்களில் மக்கள் ஒன்றுகூட முடியவில்லை. இதனால் பல செபக்கூடங்கள் எழுந்தன. ஜெருசலேமில் மாத்திரம் 480 செபக்கூடங்கள் உருவாகின. கஷ்டங்கள் நெருக்கடிகள் மத்தியிலும் அவர்களது ஆன்மீக வாழ்வு, நம்பிக்கை வாழ்வு மங்கவில்லை. மரம் ஒளியை நாடி வளர்கின்றது. வேர் நீரை நாடி வளர்கின்றது. அதுபோல குடும்பங்கள் இறைவனைத் தேட நம்பிக்கை வாழ்வு வலுப்பெற வேண்டும். கத்தோலிக்க மறைக்கல்வி நூல் (CCC 2559) சொல்கின்றது. "இறைவனுக்காக நாம் ஏங்குவது செபம், இதயம் இறைவனைத் தேடுவது செபம், விண்ணை நோக்கி நம் கண்களைத் திருப்புவது செபம், மகிழ்ச்சியோடு கூடிய அன்பின் கூக்குரலே செபம்" என்றார் தூய குழந்தை இயேசுவின் சின்னத் திரேசா.

'சிலர் கண்களைப் பார்ப்பதற்குப் பயன்படுத் துவதைவிட தூங்குவதற்கே பயன்படுத்துகின்றார்கள். நாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நம்பிக்கை வாழ்வில் தூங்க முடியாது. விவிலிய நிகழ்வுகள் எமது குடும்ப ஆன்மீக வாழ்விற்கு, நம்பிக்கை வாழ்விற்கு உரமூட்ட வேண்டும். - (2 உரோ 16:5) "பிரிஸ்கா அக்கில்லா வீட்டில் அவர்கள் ஒன்றுகூடி நம்பிக்கையோடு செபித்தார்கள்", "நிம்பா வீட்டில் கூடி நம்பிக்கையோடு செபித்தார்கள்" (கொலோ 4:15) "பிலமோன் வீட்டில் கூடி நம்பிக்கையோடு செபித்தார்கள்" (பிலமோன் 1:2).

கூடிச் செபிக்கும் குடும்பம் கூடிவாழும். *(If we pray - we will believe, if we believe - we will love, If we love - we will serve)* நாம் செபித்தால் நாங்கள் நம்புவோம், நாம் நம்பினால் நாங்கள் அன்பு செய்வோம், நாம் அன்பு செய்தால் - நாங்கள் அன்புப் பணிபுரிவோம்.

"கடவுளோடு உரையாடுவதே செபம்" என்கிறார் அலெக்ஸாந்திரிய தூய கிளமென்ட். "நீ செபத்தை நிறுத்திவிட்டால் தண்ணீரிலிருந்து வீசி எறியப்பட்ட மீனுக்கு ஒப்பாவாய்" என்கிறார் ஜோன் கிறிஸோஸ்டம். "செபிக்காதவன் தானாகவே இறந்து விடுகின்றான்" என்றார் தூய அகுஸ்தினார். "எல்லாப் புண்ணியங்களின் தொடக்கமும் வளர்ச்சியும் முதிர்ச்சியும் செபந்தான்" என்கிறார் தூய கிளரி.

குடும்பங்களில் அடிநாதமாக
நம்பிக்கை விளங்க செபிப்போம்.
நம்பிக்கை ஆண்டில்
நம்பிக்கையில் வலுப்பெறுவோம்.

●

## கருத்துக் கதை - 50
## அட்டை



அன்ரனின் இளைய மகன் 'சிங்கராஜ' காட்டைப் பற்றி ஒப்படை செய்துகொண்டிருந்தான். அவனுக்கு அன்ரன் சில உதவிகளைச் செய்து கொண்டிருந்தார். பழைய பத்திரிகைளில் இருந்து படங்களை வெட்டிக் கொடுத்தார். அப்போதுதான், சிங்கராஜ காட்டிற்கு இரத்தின புரி வழியாகச் சென்ற அனுபவத்தையும் அட்டையிடம் கடிவாங்கிய அனுபவத்தையும் சொல்லிக் கொண்டிருந்தார்.

"அட்டை என்றால் என்னப்பா...?"

இளைய மகன் கேட்டான்,

"அது மகன் பெரிய கறுத்தப் புழு போன்ற ஒன்று: காலில ஏறி அப்படியே ஒட்டிப்பிடித்து, கடித்து இரத்தத்தை உறிஞ்சிக்குடிக்கும்"

அன்ரன் சொன்னார்.

"நம்மட பகுதியில அது இல்லையா அப்பா...?"

"இல்ல மகன், பெரும்பாலும் ஈரலிப்பான மலைநாட்டுப் பகுதிகளில் தான் இது காணப்படும்..."

"எப்படியப்பா உடம்பில் இருந்து அதை அகற்றுவது...?

"வயிறு உப்ப இரத்தத்தை உறிஞ்சிக் குடிச்சபிறகு அது தன்ரபாட்டுக்கு கழண்டுவிடும்."

"சில பணக்காரர்கள் ஏழைகளை உறிஞ்சுவது போல என்னப்பா...?"

என்றான் இளையவன்.

இதனைக் கேட்டுக்கொண்டிருந்த எட்டாம் வகுப்பு கணித வீட்டு வேலை செய்துகொண்டிருந்த அன்ரனின் மூத்த மகன் சொன்னான்,

"இப்படியெல்லாம் பெரிய விளக்கம் சொல்லத்தேவையில்ல... சுருக்கமாக ஒரு வரியில சொன்னால், அப்பாவின் வங்கிக்கடன் அட்டை போல... அதுதான் வங்கியாலேயே அட்டை என்று பெயர் வச்சிருக்காங்க...." என்றான்.

அன்ரன் வாயடைத்துப் போனார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அருள்தந்தை சந்திரா பெர்னாண்டோ அடிகள்

## நீங்காத நினைவில் 25 ஆண்டுகள் ...

இலங்கையில் இனவாதமும் வன்முறைக் கலாசாரமும் விளைவித்த கொடூரங்கள் அளப்பரியன. மதவெறியும் இனவெறியும் கொலைவெறி கொண்டு கூத்தாடியதை - அதன்காரணமாக ஆயிரக்கணக்கான ஆருயிர்கள் அழிந்து தொலைந்து போனதை முள்ளிவாய்க்கால் வரை நெஞ்சில் பீதியோடு பார்த்திருக்கிறோம். கேட்டிருக்கிறோம். இத்தனை அநீதிகளுக்குப் பின்னும் அந்த வெறித்தனங்கள் நீறுபூத்த நெருப்பாக இன்றும் கனன்றுகொண்டிருப்பதை, தமது கைவரிசைகளைக் காட்டிக்கொண்டிருப்பதை பத்திரிகைகளில் பரவலாகக் காண்கிறோம்.

கடந்த மூன்று தசாப்த காலங்களில் உருப்பெற்று, வளர்ந்து, உச்சமடைந்து ஒட்டுமொத்தமாய் ஒடுங்கிப் போயுள்ள ஆயுதப் போராட்டம் இன்று புதிய வடிவங்களை, வழிகளைத் தேடவேண்டிய நிர்ப்பந்தத்தை உருவாக்கியுள்ளது. அனைத்து மக்களையும் கட்டியணைத்து நடத்திச்செல்லக்கூடிய தலைமைத்துவம் இல்லாத பரிதாபம் நமது மக்களுக்கு ஏற்பட்டுள்ளது. கட்சிக்கும் பதவிக்கும் பதிவுக்கும் போட்டி போடுபவர்களும் காட்டிக்கொடுத்துக் கழுத்தறுப்போரும் மனிதாபிமானப் போர் நடத்தி மனிதத்தை அழிப்போரும் தலைவர்களாகப் பவனி வரும் சூழ்நிலையில் இந்நாட்டில் நமது எதிர்காலம் என்னவாகுமோ என்று அப்பாவி மக்கள் அங்கலாய்க்கிறார்கள். இவ்வேளையில் கடந்த காலத்தில் மக்களோடு மக்களாக இருந்து, மக்களது பிரச்சினைகளில் பங்குகொண்டு, மக்களுக்காகக் குரல்கொடுத்து, கொடியவர்களின் கொலை வெறிக்குப் பலியான தலைவர்கள், மதப் பெரியார்கள் நம் நினைவுகளுக்கு வருகிறார்கள். அந்த வரிசையில், 1980களின் இறுதியில் மட்டக்களப்பு மக்கள் மத்தியில் நம்பிக்கையோடு பேசப்பட்டவரும் அனைத்து மக்களுக்கும் ஆறுதலும் அடைக்கலமுமாக இருந்தவரும் அருட்தந்தை சந்திரா பெர்னாண்டோ அடிகள்.



1983ம் ஆண்டு ஏற்பட்ட கொடிய கலவரத்துக்குப் பின் மெல்ல மெல்ல வளரத் தொடங்கிய வன்முறைப் போராட்டங்கள் அப்பாவி மக்களை - சாதாரண மக்களை மிகுந்த நெருக்கடிக்குள் தள்ளத் தொடங்கின. குண்டு வெடிப்புகள், சுற்றி வளைப்புகள், துப்பாக்கிச் சூடுகள், எரிப்புகள், அழிப்புகள், கைதுகள் என்று மக்கள் அஞ்சி, நடுங்கித் திகைத்து நின்றபோது, ஆதரவு தேடி ஓடிவந்தபோது, தமது பிரச்சினைகளைக் கூறி அழுதபோது, அவர்களுக்கு ஆதரவளித்து அவர்களுக்காகத் துணிந்து பேசப் புறப்பட்டவர் அருள்தந்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சந்திரா அடிகளாவார். அவர் பலருக்கும் நம்பிக்கையும் அடைக்கலமுமாயிருந்தார். அவர் ஒரு கத்தோலிக்கக் குருவாக இருந்தாலும் சபை வேறுபாடின்றி, சமய வேறுபாடின்றி அனைவரும் அவரிடம் வந்தனர். அலைகடலில் ஆபத்து வேளை யில் கையில் கிடைத்ததைப் பற்றிப் பிடித்து கரையேறத் துடிப்பதுபோல் அச்சத்திலும் பீதியிலும் உறைந்து அந்த ரித்து நின்ற மக்கள் சந்திரா அடிகளா ரைப் பற்றிப் பிடித்தனர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்காக சம்பந்தப்பட்டவர்களோடு பேசி பிரச்சி னைகளைத் தீர்ப்பதிலும் மக்களை அணி திரட்டி சாத்வீக ரீதியில் போராடுவதிலும் இனங்களுக்கிடையே நல்லிணக்கத் தையும் புரிந்துணர்வுகளை ஏற்படுத்து வதிலும் பிரஜைகள் குழு போன்றவற்று டன் இணைந்து, மக்களது பிரச்சினை களைத் தீர்க்க ஆக்கபூர்வமான குழுச் செயற்பாடுகளை முன்னெடுப்பதிலும் சந்திரா அடிகள் தீவிரமாக ஈடுபட்டார். இதன் காரணமாகவே, மக்கள் தலைவர் களைக் கொலைசெய்யவந்த கொலை காரக் கும்பல்களின் இலக்கு சந்திரா அடிகளையும் குறிவைத்தது.

அமைதிக்கான முயற்சிகள் செயற்பாடுகள் என்று அண்டை நாட்டுத் தலைவர்களும் உள்நாட்டு அரசியல்வாதி களும் இணைந்து, ஒப்புக்காக ஒரு நாடகத்தை அரங்கேற்றிக்கொண்டிருந்த ஒரு காலகட்டத்தில்தான் மக்களது தலைவர்களை அழிப்பதன்மூலம் மக்களை அச்சப்படுத்தி, நம்பிக்கையைச் சிதைத்து, உரிமைக்கான போராட்டத்தின் குரலை நசித்துவிட திட்டம் தீட்டப்பட்டது. அவர்க ளுக்கு நம்மவர்களே துணையிருந்து கொடிபிடித்தார்கள் என்பது பெருந் துயரம். இந்தக் கொலைவெறிக்குப் பலி யானவர்களில் அருட்தந்தை சந்திரா அடிகள் மிகவும் முக்கியமானவர். ஆயுதப் போரை வெறுத்து, ஆன்மீக ரீதியாக, சாத்வீக ரீதியாகக் குரல் கொடுத்தவரது குரலை ஆயுதங்களால் சிதைத்தது பெருங்கொடூரம். ஆள்வோ ரும் சரி ஆளப்படுவோரும் சரி ஆயுதத் தில் நம்பிக்கை வைத்தால் வருவது பேரழிவுதான்; அது தருவது தீராத தலை வலிதான் என்பதை இலங்கையின் வரலாறு மீண்டும் ஒருமுறை உலகிற்கு உணர்த்திக் கொண்டிருக்கிறது.

**“ அலைகடலில் ஆபத்து வேளையில் கையில் கிடைத்ததைப் பற்றிப் பிடித்து கரையேறத் துடிப்பதுபோல் அச்சத்திலும் பீதியிலும் உறைந்து அந்தரித்து நின்ற மக்கள் சந்திரா அடிகளாரைப் பற்றிப் பிடித்தனர். ”**

அருள்தந்தை சந்திரா அடிகள் போன்றோரது பணியும் அர்ப்பணமும் தியாகமுந்தான் இன்னும் முடியாத அவலங்களுக்குள் சிக்கிச் சீரழியும் நம் மக்களுக்கு நம்பிக்கை தருவதாக உள்ளது. ஆபேலின் இரத்தம் ஆண்ட வரை நோக்கிக் கூக்குரலிட்டது போல் அப்பாவிகளின் இரத்தமும் இறைவனை நோக்கிக் கூக்குரலிட்டுக்கொண்டே இருக்கிறது. நமது மக்களது தளராத நம்பிக்கையும் அர்ப்பணமும் ஒற்றுமை யுந்தான் கால் நூற்றாண்டைக் கடந்தும் நாம் நினைந்துருகும் சந்திரா அடிக ளுக்கு நாம் செலுத்தும் அஞ்சலியாகும்.


**- மலர்வேந்தன் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சென்ற இதழ் தொடர்

# நம்பிக்கையில்லாத வாழ்வு!



**மாணவன்** :- "இல்லை ஐயா. அப்படியொன்றும் இல்லவேயில்லை!"

இந்த திருப்பத்துடன் விரிவுரை மண்டபமே ஸ்தம்பித்துப் போயிற்று

**மாணவன்** :- "ஐயா, ஏராளமான வெப்பம் என்று இருக்கலாம். அதிக வெப்பம் இருக்கலாம், பாரிய வெப்பம் என்று இருக்கலாம். ஏன் கொஞ்ச வெப்பம் என்றும் அறவே வெப்பமில்லை என்றும் இருக்கக்கூடும். ஆனால் குளிர் என்ற ஒன்றேயில்லை. நாங்கள் 458 டிகிரிக்குக் கீழே கூட போக முடியும். ஆனால் அது குளிரில்லை. அதற்கு மேல் எங்களால் போக முடியாது. குளிர் என்ற சொல்லை வெப்பம் இல்லாத நிலையை விபரிக்கவே நாம் பாவிக்கின்றோமேயொழிய குளிர் என்பது இல்லை. எங்களால் குளிரை அளவிட முடியாது. வெப்பமானது சக்தி. குளிர் வெப்பத்திற்கு எதிரானது அல்ல. ஐயா, அது வெப்பமில்லா நிலை!"

(விரிவுரை மண்டபத்தில் குண்டூசி விழுந்தாலும் கேட்கக்கூடிய நிசப்தம் நிலவியது.)

மாணவன் தொடர்ந்தான்,

"இருட்டைப் பற்றி என்ன பேராசிரியர் அவர்களே! இருள் என்று ஏதும் உண்டா?

**பேராசிரியர்** :- "உண்டு, இருட்டு இல்லாமல் இரவு என்பதேது?"

**மாணவன்** :- "திரும்பவும் தவறு பேராசிரியர் அவர்களே! இருள் என்பது ஒன்றின் இல்லாமையைக் குறிக்கின்றது. குறைந்த ஒளியை அல்லது சாதாரண ஒளியை, பிரகாசமான ஒளியை அல்லது கண்ணைப் பறிக்கக் கூடிய ஒளியை மட்டுமே நீங்கள் கொண்டிருக்க முடியும். ஆனால், தொடர்ச்சியாக ஒளியின்றேல் ஒன்றுமேயில்லாத அந்த நிலையை நீங்கள் இருள் என்று விபரிக்கின்றீர்கள் இல்லையா? உண்மையில் இருள் என்ற ஒன்று இல்லை என்பதுதான் யதார்த்தம். அப்படி இருள் இருந்தால் அதை இன்னும் இருளாக ஆக்க முடியும். ஆனால் உங்களால் அதைச்செய்ய இயலாது."

**பேராசிரியர்** :- "அப்படியென்றால் நீ என்ன கருத்தை வலியுறுத்த வருகிறாய் இளைஞனே?"

**மாணவன்** :- "ஐயா, நான் கூற வருவதெல்லாம் உங்களது விஞ்ஞான தத்துவ வரையறைகள் எல்லாமே தவறுகள் என்பதுதான்"

**பேராசிரியர்** :- "தவறுகளா..? அதை உன்னால் விபரித்துக் கூற முடியுமா?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**மாணவன்** :- "ஐயா, உங்கள் வாதமெல்லாம் இரட்டைத்துவம் கொண்டுள்ளன. முதலில் வாழ்வைப் பற்றிச் சொல்லிவிட்டு பின் சாவைப்பற்றிக் கூறுகிறீர்கள். ஒரு நல்ல கடவுள் என்று சொல்லிவிட்டு கெட்ட கடவுள் பற்றியும் சொல்லுகின்றீர்கள். கடவுள் என்னும் அம்சத்தை முடிவுள்ள, அளக்க முடியுமான ஒன்றென வாதம் செய்கின்றீர்கள். ஐயா விஞ்ஞானமானது, ஒரு சிந்தனை என்றால் என்ன என்று இதுகாறும் விளக்கிய தில்லை. விஞ்ஞானம் மின்சாரத்தையும், காந்தத்தையும் பயன்படுத்துகின்றது. ஆனால் இதுவரைக்கும் அது அவற்றைக் கண்டதுமில்லை, அவற்றைப்பற்றி முழுமையாக விளங்கிக்கொண்டதுமில்லை. சாவானது வாழ்வுக்கு எதிரானது என்று நோக்க முனைவது, சாவு ஒரு மாற்றீட்டுப் பொருளல்ல என்பதை புறக்கணித்துச் செயல்படுவது போலாகும். சாவு வாழ்வுக்கு எதிரான ஒன்றில்லை. அது வாழ்வு இல்லாத நிலையை அடையாளப் படுத்துகிறது. சொல்லுங்கள் பேராசிரியர் அவர்களே... உங்கள் மாணவர்களுக்கு அவர்கள் குரங்கிலிருந்து கூர்ப்படைந்தவர்கள் என்று நீங்கள் படிப்பிப்பதில்லையா?

**பேராசிரியர்** :- "இயற்கையான கூர்ப்புத் தேற்றம் பற்றி நீ கூறுவதாக இருந்தால், ஆம் நான் அதைப் படிப்பிக்கிறேன்,"

**மாணவன்** :- "அப்படியென்றால் நீங்கள் கூர்ப்பைக் கண்ணால் கண்டதுண்டா?"

பேராசிரியர் விவாதத்தின் போக்கினைப் புரிந்துகொண்டவராய் இல்லையென்று தலையசைத்துப் புன்னகைத்தார்.

**மாணவன்** :- "ஒருவராவது கூர்ப்பு செயல்படுவதைக் கண்டதுமில்லை, அது தொடர்ந்து செயல்படுவதாகக் கூற எவராலும் முடியாத நிலையில் இருக்கின்றபோது, நீங்கள் உங்கள் சொந்தக் கருத்துக்களைத்தான் எடுத்துக்கூறி படிப்பிக்கின்றீர்கள் என்றா கிறது இல்லையா? அந்தவகையில் நீங்கள் ஒரு விஞ்ஞானியல்ல ஒரு போதகர்தான் ஐயா!"

வகுப்பு முழுவதும் கை தட்டிஆரவாரம் செய்தது.

**மாணவன்** :- (சகமாணவர்களிடம்) இந்த வகுப்பிலுள்ள உங்களில் யாராவது மதிப்பிற்குரிய நமது பேராசிரியரின் மூளையைக் கண்டதுண்டா?"

அனைவரும் சிரித்துவிடுகின்றனர்.

**மாணவன்** :- "இங்குள்ள மாணவர்களில் எவராவது நமது பேராசிரியருடைய மூளையைக் கேட்டதுண்டா? உணர்ந்ததுண்டா? தொட்டதுண்டா? நுகர்ந்ததுண்டா? ஒருவரும் அப்படியெல்லாம் செய்ததாகத் தெரியவில்லை. எனவே பேராசிரியர் தற்போது கூறிய தைப் பார்த்து, பகுப்பாய்ந்து, பரிசோதித்து, ஆய்வுக்குட்படுத்தி, எடுத்துக்காட்டவல்ல நிலையான, விஞ்ஞான தத்துவங்களின் அடிப்படையில் உங்களுக்கு மூளையென்பதே கிடையாது என்று விஞ்ஞானம் சொல்லுகின்றது பேராசிரியர் அவர்களே! அப்படியிருக்க உங்கள விரிவுரைகளை நாம் எப்படி நம்பமுடியும் என்று சொல்லுங்கள் பார்க்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வகுப்பில் நிசப்தம் நிலவியது. மாணவனைக் கூர்ந்து நோக்கிக் கொண்டிருந்த பேராசிரியர் முகம் ஆழம் காண முடியாத ஆழியைப் போல இருந்தது.

**பேராசிரியர்** :- "தம்பி, நான் நினைக்கின்றேன் அவற்றை நம்பிக்கையின் அடிப்படையில் எடுத்துக்கொள்ள வேண்டியதுதான்"

**மாணவன்** :- "அதுதான் ஐயா முற்றிலும் சரியான கூற்று! கடவுளுக்கும் மனிதனுக்குமிடையிலான தொடர்பே நம்பிக்கைதான். அதுதான் எல்லாவற்றையும் உயிரோடு இயங்கப் பண்ணிக்கொண்டிருக்கின்றது"

**பா**ருங்கள்! விஞ்ஞான தத்துவங்களினடிப்படையில் கடவுள் இல்லையென்று நிரூபிக்க முனைந்தவருக்கு அதே விஞ்ஞான தத்துவங்களினடிப்படையில் கடவுள் இருக்கின்றார், ஆனால் அதை ஏற்றுக்கொள்ளவும், புரிந்து கொள்ளவும் நம்பிக்கைதான் தேவை என்பதை அந்த மாணவன் வலியுறுத்திக் காட்டுகின்றான். ஆம் இன்றைய உலகில் அனைத்தையும் வாழ வைப்பதும், இயங்க வைப்பதும், உறவாட வைப்பதும் இறைவனின் மேல் நாம் கொண்டிருக்கக்கூடிய நம்பிக்கைதான்.

இதில் விசேடம் என்ன தெரியுமா? இந்த உரையாடல் உண்மையாகவே நடந்ததொன்று. அந்த மாணவனும் வேறு யாருமல்ல புகழ்பூத்த **விஞ்ஞானமேதை அல்பேர்ட் ஐன்ஸ்டீன் தான்!** ■


## தமிழ்த்தூது தனிநாயக அடிகள் நூற்றாண்டு விழாச் சிறப்பிதழ்



தமிழ்த்தூது தனிநாயக அடிகளின் நூற்றாண்டு விழா உலகெங்கும் தமிழர் வாழும் இடமெல்லாம் கொண்டாடப்பட்டு வருகிறது. தனிநாயகம் அடிகளாரின் தன்னிகரில்லாப் பெரும்பணியை கௌரவிக்கும் வகையில் ஆகஸ்ட் – செப்டம்பர் மாதங்களை இணைத்து தொண்டன் சிறப்பு மலராக மலரவிருக்கிறது.

சிறப்பு மலரைச் சிறப்பிக்க எழுத்தாளர்களிடமிருந்து தரமான படைப்புகளை எதிர்பார்க்கிறோம். அடிகளாரின் வரலாறு, பயணம், பணிகள், ஆய்வு முயற்சிகள், வெளியீடுகள், உரைகள், சுவையான தகவல்கள் மற்றும் இன்னோரன்ன விடயங்களைக் கொண்ட ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன.

சுருக்கமாக எழுதுங்கள்! சுவையாக எழுதுங்கள்!

**ஆக்கங்கள் வந்துசேரவேண்டிய இறுதி நாள்: 2013 ஜூலை 15.**

தனிநாயகம் அடிகள் நினைவுக் கருத்தரங்கு 12.06.2013, காலை 09.30 மணி, சார்ள்ஸ் மண்டபம், மட்டக்களப்பு.

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்!**


**வீ**ழ்ந்ததநிலம் எங்களது உரிமை
வந்தேறு குடிகளல்ல உண்மை
சூழ்ந்ததுயர் எதுவரினும் வீழ்ந்துடலம் எரிந்திடினும்
நிலம்வேண்டு மினமிங்கு வாழ.




குறும்(புப்)பா – 113

– மலர் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




இம்முறை இலக்கிய மஞ்சரியில் மூன்று இறுவட்டுகள் பற்றிப் பார்ப்போம்:

## 1. செல்லம் :

தேவ அலோசியஸ் அவர்களின் இயக்கத்தில் வை(f)ன் ஆர்ட்ஸ் கிரியேசன்ஸ் வழங்கும் 'செல்லம்' குறுந் திரைப்படத்தைப் பார்வையிடும் வாய்ப்பு அண்மையில் கிடைத்தது. சுமார் 18 நிமிடங்கள் ஓடும் இப்படத்திற்கான ஒளிப்பதிவை சு. நந்தகோபால் அவர்களும், படத்தொகுப்பை மைக்கல் டீ பீற்றர்ஸ் அவர்களும் மேற்கொண்டுள்ளார்கள்.

பிள்ளைகளுக்குப் பெற்றார் கொடுக்கும் செல்லம் எவ்வளவு விபரீதமானது என்பதை இக்குறும்படம் விளக்குகின்றது. குறிப்பாக தாயானவள், பிள்ளைக்காகச் செய்யும் 'வக்காலத்து' அவளின் உயிருக்கே ஆபத்தாக வருவதை இப்படைப்பு விளக்குகின்றது.

அருமையான தெளிவான படப்பிடிப்பு, படத்தொகுப்பு, இசையமைப்பு, இயக்கம் என்பன எம்மை நிமிர்ந்திருந்து பார்வையிட வைக்கின்றன. ஒவ்வொரு பெற்றோரும் பார்வையிட வேண்டிய குறும்படம். நடிகர்கள் தம் பங்கைச் சிறப்பாகச் செய்துள்ளனர். சிறுவனின் நடிப்புச் சிறப்பானது. படத்தில் சிறுவன் வைத்திருக்கும் கத்தியும் இறுவட்டு உறையில் உள்ள படத்தில் சிறுவன் வைத்திருக்கும் கத்தியும் வெவ்வேறு என நினைக்கின்றேன். சிறு நாடகத் தன்மையொன்று சில இடங்களில் காணப்பட்டாலும் மொத்தத்தில் அபாரம்.

## 2. சல்லி : (ZAL-LEE)

மிக்கேல் கல்லூரியின் உயர்தர வகுப்பு மாணவர்களின் முயற்சியில் இக்குறும்படத்தை அண்மையில் பார்வையிடக் கூடியதாய் இருந்தது. கொன்ஸ்டன் கிஷான் அவர்களின் இயக்கத்தில் வெளிவந்திருக்கும் இப்படத்தில் சில இடங்களில் 'மங்காத்தா' திரைப்படத்தின் பாதிப்பு இருக்கிறது. ஆனால் சொல்லவந்த விடயம் சிறப்பானது. 'சல்லி' என்னும் படத்தைப் பார்த்த இரு சகோதரர்கள் தாம் அடிபட்டுக்கொள்வதை இறுதியில் காட்டி, பிள்ளைகள் எவ்வாறான படங்களைப் பார்க்கின்றார்கள் என்பதைப் பெற்றார் அவதானிக்க வேண்டும் என்பதனை படிப்பினையாகச் சொல்கின்றது இப்படம்.

முற்றுமுழுதாக கிடைத்த உபகரணங்களை வைத்துக்கொண்டு படப்பிடிப்பைச் செய்துள்ளார்கள். நவீன உபகரணங்களைப் பயன்படுத்தவில்லை. இம்மாணவர்கள் எவரும் பயிற்சிபெற்ற, அனுபவம் பெற்ற தொழில்நுட்பவியலாளர்கள் இல்லை. எனினும் இயன்றளவு சிறப்பாகச் செய்துள்ளார்கள். இசை, நடிப்பு, படத்தொகுப்பு, ஒளிப்பதிவு எல்லாம் மிக்கேலின் புதல்வர்களே! 'சிறுபிள்ளை வேளாண்மை' என்றாலும், விளைச்சல் பரவாயில்லை. சில நூறு இறுவட்டுகள் விற்றுத் தீர்க்கப்பட்டதாக அறிந்து ஆச்சரியப்பட்டோம். இன்னும் வளரவேண்டியவர்கள். பாராட்டுகள்! 35 நிமிடம் 20 செக்கன் ஓடுகின்ற இக்குறும் படத்தை இணையத்திலும் உலவவிட்டுள்ளார்கள்.

## 3. ஆமென்

மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயரின் ஆசியுடன் வெளிவந்திருக்கிறது 'ஆமென்' என்ற இறைவனைப் புகழ்ச்சிப்படுத்தி, ஆராதிக்கும் ஒலி இறுவெட்டு. அருட்பணி ரமேஷ் கிறிஸ்ரி அடிகளாரின் முயற்சியில் வெளிவந்திருக்கும் இவ்விறுவட்டில் அருங்கொடை செபவழிபாட்டுக்குரிய அம்சங்கள் சிறப்பாக அடங்கியுள்ளன. பக்தியுடன் இறைபிரசன்னத்தை வெளிப்படுத்தும் இவ்விறுவட்டினை வாங்கிப் பயன்பெற வேண்டியது விசுவாசிகள் ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

**குறிப்பு :** பாலாவின் 'பரதேசி' பார்த்தீர்களா...? இயலுமானால் அதுபற்றி எழுதியனுப்புங்களேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**இயேசுவின் திருவுடல் திரு இரத்தப் பெருவிழா - ஜுன் - 02**

# நவீன அரசியல் பொருளாதாரம் –

## இயேசுவின் பகிர்தல் ஊடான பார்வை!

இம்மாதம் 2ம் திகதி இயேசுவின் திரு உடல் திரு இரத்தப் பெருவிழாவை திருச்சபை கொண்டாடியது. கிறிஸ்து மானுட மீட்பிற்காகத் தம் திரு உடலையும் திரு இரத்தத்தையும் பகிர்ந்து கொடுத்தார். தம்மையே உயிரளிக்கும் உணவாக, தாகந் தீர்க்கும் பானமாகக் கையளித்தார். அன்பின் உச்சத்தைத் தொட்ட நிகழ்வாக இது போற்றப்படுகின்றது. இதனை "மன்னுயிர் வாழத் தன்னுயிர் ஈந்த மாபரன்" என்று கவிஞர் வருணிப்பர். அன்பில் பகிரும் இந் நிகழ்வே கிறிஸ்தவத்தின் அடிப்படையாகும்.

கிறிஸ்துவின் இப்பகிர்தலுக்குப் பின்னால் அன்பும் தியாகமும் மட்டுமன்று ஓர் அரசியல் பொருளாதாரத் தத்துவமே புதைந்திருக்கிறது. இன்றைய உலகப் பொருளாதார முறை – தாராள சந்தைப் பொருளாதார முறை ஒரு சில அல்லது ஒரு குழுவினர், குறிப்பாகச் சர்வதேசக் கம்பனிகள் உள்ளூர் முதலாளிகளுடன், தரகர்களுடன் இணைந்து பன்னாட்டு மக்களையும் அவர்களது வளங்களையும் சுரண்டி ஏப்பம் விடுகின்ற ஒரு முதலாளித்துவ சுரண்டல் பொருளாதார முறையாகும். பலர் வாழத் தன்னை இழந்தார் கிறிஸ்து. ஆனால், இன்றைய உலகில் சிலர் வாழ பலர் சுரண்டப்படுகின்றார்கள், ஒடுக்கப்படுகின்றார்கள், அழிக்கப்படுகின்றார்கள். இதனை ஜனநாயகம், திறந்த பொருளாதாரம், போட்டிப் பொருளாதாரம் என்ற கவர்ச்சியான சொல்லாடல்களால் மக்களை ஒடுக்கி உலக நிறுவனங்கள் செய்துகொண்டிருக்கின்றன. இந்த நிறுவனங்களின் செல்லப்பிள்ளைகளான அரசுகளும், அமைப்புகளும் இவற்றுக்குத் துணைநிற்கின்றன.



இனியம்

பகிர்தலின் வழியே வாழ்வு பிறக்கிறது என்பதே கிறிஸ்தவத் தத்துவம். ஆனால் இன்றைய அரசுகளும் அமைப்புகளும் இதற்கு முரணாகவே செயற்படுகின்றன. தமது நாடு, இனம், மதம், பாதுகாப்பு எனும் பெயர்களால் ஏனைய மக்களது உரிமைகளை, அவர்களது வளங்களை, வாழ்விடங்களைப் பறிப்பதிலும், கையகப் படுத்துவதிலுமே முனைப்புக் காட்டுகின்றன. இதனால் நமது நாடு உட்பட, உலகின் பல நாடுகளிலும் மக்கள் தமது வாழ்விடங்களை இழந்து, வளங்கொழிக்கும் தமது பாரம்பரிய நிலங்களை இழந்து அந்தரித்து நிற்கின்றனர்; வழிதெரியாது அல்லாடுகின்றனர். போரினால் அழிந்தொழிந்தது போக இன்று குந்தியிருக்க ஒரு குடிசைபோடத்தானும் இடமில்லாது அலைவது, அலைய வைப்பது ஓர் ஆக்கிரமிப்பு அரசியல். இவைகளை மதத்தின் பெயராலும் மனிதாபிமானத்தின் பெயராலும் காருண்யம் பேசிக்கொண்டும் செய்வது மகா கொடுமை! நிச்சயமாக இது வாழ்வுக்கான, அபிவிருத்திக்கான வழியுமல்ல, அரசியல் முறையுமல்ல!

கல்வாரியோடு நாம் வாழ்வை முடித்துவிட முடியாது. கிறிஸ்துவின் பகிர்தல் வாழ்வுக்கான ஒரு தேடலுக்கு வழிகாட்டுகிறது. அது உயிர்ப்பை நோக்கி நடக்கின்ற ஒரு போராட்டமாகும். அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஆயுதங்களினால் அல்ல, அன்பினால், அகிம்சையினால், நம்பிக்கையோடு நடத்தப்படுகின்ற ஒரு போராட்டம். கிறிஸ்துவின் திரு உடல் திரு இரத்தப் பெருவிழா நம்மை அன்பு செய்து வாழ, பகிர்ந்து வாழ, ஒரு மேலான வாழ்வுக்காக நம்பிக்கை யோடு போராட நம்மைத் தூண்டு கிறது. இன்னும் தொடர்ந்து நாம் சிந்திக்கலாம்......!

~ மலர் ~



ஓரினமாய் ஓருடலாய் இருப்போம்
உறவுக்குள் ஒன்றாகக் கலப்போம்
பேரினத்தார் கூறுகிறார் பெருங்கவனம் கலப்பதனால்
கரைவதுசிறு பான்மையினந் தான்.

குறும்(பு)பா – 114

# சகானா

இனிய சகானா
தந்திகளின் சிணுங்கலும்
என் இதயத்துடிப்புகளின் ஓசையுமே
இந்தக் கவிதை



தாலியை வேலியாக்கி
தவிக்கவிட்டுப் போய்விடும்
தனிமையைத் தாரைவார்க்கும்
உயிர்திருகி உடல் தகிக்கும்
மாங்கல்யம் தந்துனானே
மதி கெட்டோர் சடங்குகள்.

உனக்குள் உறங்குகின்றான்
ஆண்மைகொண்ட சூரியன்
சம்பிரதாயச் சாக்கடையை
தொலைத்துவிட்டுப் புறப்படு
ஒளியை வருடிப் போர்த்திக்கொள்
கற்புக்கும் அரைக்கச்சைக்குமான
எல்லைக் கோட்டை தகர்த்தெறி
மனவுறுதி நாற்றுக்கு
கண்ணீரை உரமாக்கு
உனக்கு நீயே அரசி
யாரையும் சிதைக்காத
நலங்களை வரிந்துகொள்
ஓடு ஓடு
உலகின் எல்லைவரை ஓடு
நிலவிலும் நடனமிடு
செவ்வாயின் விலையைக் கேள்
அணுக்கருவின் உயிர்பிளந்து
அகிலத்தில் சாதனை செய்
ஆயினும் இனியவளே
அன்னை தெரேசாவாய்
பூவுலகை ஆட்சிசெய்
தாய்மையைப் போற்று
தரணியின் முழுமை, தாய்மை ஒன்றுதான்.

பைந்தமிழ்க்குமரன் டேவிட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## வாழ்க்கைக்கு 07

**ம**ரணம் என்றால் என்ன நண்பா....?

வாழ்க்கை ஒரு காலகட்டத்தோடு முடிந்து விடுகின்றது; முடியுமிடம் மரணம். மூச்சு நின்று போகின்றது; உடம்பு புதைக்கப்படுகிறது; உருவம் மறைந்துவிடுகிறது; வந்தது தெரிகிறது. போவது எங்கே...? ஏன் வரவேண்டும்? எதற்காகப் போக வேண்டும்? மனிதனால் கண்டுபிடிக்க முடியாமல் இருப்பது இது ஒன்றுதான்.

வாழ்வு பரபரப்பானது. மரணம் அமைதியானது. வாழ்க்கைக்குத் தேவை இருக்கிறது. மரணத்திற்கு என்ன தேவை நண்பா?




அதோ
தெரிகிறது
சுடுகாடு. வா
நண்பா, அங்கே
போவோம்.
புதைக்கப்பட்ட மனித
பிணங்களின் மேலே போடப்பட்ட
மண்மீது நின்று பார்ப்போம்!!

என்ன கேட்கிறது உன் காதுகளுக்கு...? இங்கே ஒருவரோடு ஒருவர் பேசிக்கொள்ளவில்லை. அதனால் தகராறுகள் இல்லை. வயிறு புதைந்து கிடக்கிறது. பசி பறந்துவிட்டது. நடந்துகொண்டிருந்த அவனும் அவளும் தங்கள் எலும்புக்கூடுகளை சிதறப் போட்டுவிட்டார்கள். உண்மைதான், மரணம் அமைதியானதுதான். அடக்கமில்லாத மனிதனுக்கும் அடக்கத்தைத் தருவது மரணம் மட்டுந்தான் நண்பா!

மரணத்தின் பின் இன்னொரு வாழ்வு என்பதில் பலருக்கு நம்பிக்கை இல்லை. ஆனால், லூக்கா நற்செய்தியில் 20ல் ஆண்டவர் சொல்லுகிறார், இன்னொரு வாழ்வு உண்டு. மரணம், சிதைத்த உடலை, சிதறிய எலும்பை எல்லாம் சேர்த்து எடுத்துக் கோர்த்து அழகிய மணிமாலையாக மறு வாழ்வுக்குள் கொண்டு சேர்த்திடுவார்.

நியூட்டனின் நண்பன் ஒருதடவை அனேக இரும்புத் துகள்களை மண்ணோடு கொட்டி இரண்டறக் கலந்து விட்டு இனி இதனை எப்படி மண்ணில் இருந்து பிரித்தெடுப்பாய் என்று கேட்டபோது, சிறு காந்தத் துண்டை அந்த மண்மீது நீட்டினார். நியூட்டன். மண்ணில் புதையுண்ட இரும்புத் துகள்கள் எல்லாம் மீண்டும் ஒன்றாக்கப்பட்டன.

இந்தச் சாதாரண காந்தத் துண்டுக்கே இவ்வளவு சக்தி இருக்கிறது என்றால் சர்வமும் படைத்த தேவனுக்கு மண்ணோடு கலந்த →



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நவீன நரிக் கதைகள் 02



செங்குரங்குகளிடமிருந்து வனத்தை நரிகள் அபகரிக்கும்வரை அது அமைதியாகவேயிருந்தது.

நரிகள் வெறிபிடித்துக் கடித்த அக்கணத்திலேயே மிருகங்கள் செத்துவீழ, புலி, சிங்கம் உட்பட அனைத்து மிருகங்களும் நரிகளுக்குப் பயந்தன. நரிகளுக்கோ குருச் சந்திரயோகம்.

நரிகளின் இராட்சியத்துக்கு பெயருக்கு ஓர் அரசன் தேவைப்பட்டபோது, நரிகளிடையே கருத்து வேறுபாடுகள் எழுந்தன. அப்போது, புத்திசாலி நரியொன்று,

"காட்டுக்கு அரசன் சிங்கமென்று சொல்வதே யொழிய நரியென்று சொல்வதில்லை. எனவே, மிருக தர்மத்தின்படி சிங்கமொன்றையே அரசனாக்குவோம்"

என்று சொன்ன அதே கருத்து, நரிகளின் தாளத்துக்கு ஏற்ப ஆடவல்ல ஒரு கிழட்டுச் சிங்கமாவது இருக்க வேண்டும் என்கிற திருத்தத்தோடு ஏற்றுக் கொள்ளப்பட்டு, பிடரி மயிர் உதிர்ந்து, தேய்ந்து தோல் சுருங்கிய சிங்கமொன்றைத் தேர்ந்தெடுத்துச் சுப நாளொன்றில் அதற்கு முடிசூட்டுவித்தன. கிழட்டுச் சிங்கத்தின் உருவம் தாங்கிய சுவரொட்டிகளால் வனம் திமிலோகப்பட்டது.

கிழட்டுச் சிங்கமோ, தனக்கெனப் பிரத்தியேகமாக மலை உச்சியில் ஒதுக்கப்பட்ட குகையில், மென்மையான முயல் இறைச்சியை இளஞ்சூட்டுடன் உண்டு, அங்கேயே மணிமுடியோடு நாளெல்லாம் ராஜபோக உறக்கத்தில் கழித்தது.

→

உடலை மண்ணிலிருந்து பிரித்தெடுத்து உயிர்ப்பிக்க முடியாதா என்ன...?

ஒன்றை நினைவில்கொள் நண்பா! இலைகள் வீழ்ந்தாலுமே கிளையில் துளிருள்ளது. இரவில் வீழ்ந்தாலுமே இன்னும் நிலவுள்ளது. இறந்துபோன மனிதனுக்கு இன்னொரு வாழ்வுள்ளது நிச்சயம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நரிகளோ தங்கள் தங்கள் வளைகளில் அமர்ந்து கொண்டு, வயது சென்ற விதவை மிருகங்கள் பிச்சையெடுத்து வரும் மாமிசத்தை உண்டு பருத்து, ஏக போகத்தில் திளைத்து, அப்போதைக்கப்போது அடாவடியிலும் ஈடுபடலாயின.

நரிகளின் அடாவடியைச் சகிக்காத சில மிருகங்கள் சிங்கராசாவிடம் முறையிட்டன. சிங்கமோ,

"நீங்கள்தான் ஏதோ தவறுகள் செய்கிறீர்களேயொழிய, நரிகளுக்குத் தவறென்றால் என்னவென்றே தெரியாது. அவர்கள் வானவர்கள். நீங்கள் நரிகளோடு ஒத்துழைக்காவிடின் உங்களை 'வனப் பிரஷ்டம்' செய்ய நேரிடும்"

எனத் தன் நடுங்கும் குரலால் எச்சரித்து அனுப்பியது.

மேலே சுயபுத்தியற்ற சிங்கம், கீழே கொடிய நரிகள் இதற்கிடையில் பாவப்பட்ட மிருகங்களென அந்தவனம் பரிதாபமாய்க் காட்சியளித்தது.

நீதியின்மை, கரிசனைக் குறைவு, சக மிருகங்களை மதியாமை போன்ற காரணங்கள் வலுப்பெற, இதற்கப்பாலும் இந்த வனத்தில் நியாயம் கிடைக்கப் போவதில்லையென்பதை உறுதிசெய்த மிருகங்களில் சில வேறு காடுகளைத் தஞ்சமடைந்தன. வேறு சில துணிவுள்ள மிருகங்கள் தமக்கெனத் தனியான வனங்களை அமைத்ததோடு, இன்னும் புதிய போதங்களோடு புதிது புதிதாய் வனங்கள் உருவாக வேண்டுமென்றும் செயல்படத் தொடங்கின.

உறக்கம் கலைந்த நரிகள், வேறு வனங்களிலிருந்து டமாரங்களையும், கழுதைகளையும், ஒலி வாங்கியோடு பிறந்த காட்டெருமைகளையும் வாடகைக்கு அமர்த்தின. கழுதைகள் டமாரங்களைத் தட்டி இரைந்தும் பாடியும், காட்டெருமைகள் தாம் சுமந்துவந்த ஒலி வாங்கிகளுக்கு முன்னின்று முக்கியும், முனகியும், மிரட்டியும் பார்த்தன. பலன் கிட்டுவதற்கான அறிகுறிகளே தென்படவில்லை.

திடீரென ஓர் அதிகாலையில் அனைத்து நரிகளும் காணமற்போயின. அதனையெண்ணி விலங்குகள் விழாக்கொண்டாடியதும் அதிகநாள் நீடிக்கவில்லை.


எண்ணி ஆயிரத்து ஓராவது நாள் அதிகாலையில், ருத்திராட்சதாரிகளாய் நரிகள் புதிய வடிவில் எங்கும் பிரசன்னமாயின. தாங்கள் ஏதோ ஒருவித அசரீரியின் பேரில் இமயஞ் சென்று இமயானைத் தரிசித்து வரங்களைப் பெற்றதாகவும், தாங்களின்றி இந்த வனத்துக்கு விமோசனமே இல்லையென்றும், அனைவரும் அதிகாலையில் எழுந்து நரிமுகத்தில் விழித்த பலனை நாள்தோறும் பெறவேண்டுமெனவும் பீற்றிக்கொண்டு, பகல் முழுவதும் தங்கள் ஊது குழல்கள் மூலம் வனமெங்கும் மந்திரோச்சாடனம் ஒலிக்கச் செய்தும் இரவுகளில் நறுமணத்தில் நீராடிக் காதல், கவறாடல், கள்ளுணணல் எனச் சுகித்துக்கிடந்தன. எதற்குமோர் எல்லையுண்டல்லவா...? இந்நிலை அதிக நாள் நீடிக்கவில்லை.



- தொடர் 22ம் பக்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




## இந்தியாவில் கிறிஸ்தவம்

இந்தியாவில் இன்று ஏறக்குறைய 30 கோடி கிறிஸ்தவர்கள் வாழ்கின்றனர். இந்தியாவின் சனத்தொகையில் 2.5% ஆனவர்கள் கிறிஸ்தவர்கள். இந்துக்கள், முஸ்லீம்களுக்கு அடுத்தபடியாய் இருப்பவர்கள் கிறிஸ்தவர்களாவர். கிறிஸ்தவமானது, இந்தியாவில் இருவேறு காலகட்டங்களில் கொண்டு வரப்பட்டது. முதலில், 1ம் நூற்றாண்டில் அப்போஸ்தலர் காலத்தின்போது, அப்போஸ்தலரான யூதாஸ், தோமையார் வழியாக கீழைத்தேய நாடான சிரியாவிலிருந்தும் அடுத்து, 345ல் கானான் நாட்டு தோமாவின் தலைமையில் ஏறக்குறைய 300-400 யூதக் குடும்பங்கள் கிரங்கனூர் துறைமுகத்தில் வந்திறங்கி அங்கே ஓர் ஆலயத்தையும், துறைமுகத்தையும் கட்டிக் குடியேறினார்கள் எனக் கூறப்படுகிறது. மற்றும் 9ம் நூற்றாண்டில் 823ல் கிறிஸ்தவமானது மாசாபோர், சப்ரிசோ என்பவர்களால் பேர்சியாவிலிருந்தும் பின்பு 16ம் நூற்றாண்டில் போர்த்துக்கேயர் வழியாய் மேற்கத்திய நாடாகிய ஐரோப்பாவிலிருந்தும் கொண்டுவரப்பட்டது.

இயேசு விண்ணகம் சென்றபின்னர் அவரது வேண்டுகோளுக்கமைய பன்னிரு அப்போஸ்தலர்களும் பல்வேறு நாடுகளுக்கும் சென்று, நற்செய்தியை அறிவித்து, மக்களை மனந்திருப்பினர். இவர்களில் ஒருவரான அப்போஸ்தலர் யூதாஸ், தோமையார் 52ம் ஆண்டில் இலங்கைக்கு வந்து, அங்கு நற்செய்தியை அறிவித்து, மக்களுக்குத் திருமுழுக்குக் கொடுத்து அவர்களைக் கிறிஸ்தவர்களாக்கினர். தோமாஸ் ஒரு தச்சர். எனவே, ஒரு வியாபாரி கோயில் கட்டுவதற்காக அவரை 52ல் கிரங்கனூர் எனும் இந்தியாவிலுள்ள மலபார் கடற்கரைக்கு அழைத்து வந்ததாய்க் கூறப்படுகிறது. இங்கு தோமையார் நற்செய்தியை அறிவித்து, பல இந்தியர்களை மனந்திருப்பினார். இவர்களைக் கொண்டே கிரங்கனூரிலுள்ள 7 கிறிஸ்தவ சமூகங்களை உருவாக்கினார். இவர்கள் கீழைத்தேய சீரிய கிறிஸ்தவர்கள் என அழைக்கப்பட்டனர். இவர்கள் பாலஸ்தீனாவில் இருந்து வந்து ஏற்கெனவே குடியிருந்த யூதர்களாய் இருக்கலாம் எனக் கூறப்படுகிறது.

இரண்டாம் கட்டமாய் 14ம் நூற்றாண்டிற்குப் பிறகு கிறிஸ்தவமானது, ஐரோப்பாவிலிருந்து வந்த போர்த்துக்கேய மறைபரப்பாளர்களால் இந்தியாவிற்கு கொண்டுவரப்பட்டது. 1498ல் போர்த்துக்கேய மாலுமிகள் வாஸ்கொடகாமாவின் தலைமையில் இந்தியா சென்றடைந்து, கோவாவைத் தங்கள் வாணிபத் தளமாய் அமைத்தனர். இவர்களுடன் பிரான்சிஸ்கன் துறவற சபையினரும் இந்தியா வந்தனர். போர்த்துக்கேய ஆட்சிக்குட்பட்ட நாடுகளில் மறைபணியைச் செய்ய, ஆலயங்களைக் கட்ட, குருக்கள், ஆயர்களை நியமிக்க, அவர்களை பராமரிக்க அதிகாரச் சலுகைகள் திருந்தந்தை 4ம் நிக்கொலசால் போர்த்துக்கேய அரசருக்கு 1455ல் வழங்கப்பட்டிருந்தது. இந்நடவடிக்கையினை "பத்றோவாடோ" என்றழைப்பர். எனவே, பிரான்சிஸ்கன் சபையினர் 1550ல் கள்ளிக்கோட்டையில் தமது முதல் திருப்பலியை ஒப்புக்கொடுத்தனர். இதன்பின் இவர்கள் கொச்சியில் பணித்தளம் அமைத்து, கொல்லத்தில் பலரை மனந்திருப்பினர். காலஞ் செல்ல டொமினிக்கன் சபையினரும் இவர்களுடன் இணைந்து கொண்டனர். கோவா நகரமே இவர்களின் மறைபரப்பு மையமாய் அமைந்தது. 1542ல் இயேசு சபையைச் சேர்ந்த புனித பிரான்சிஸ்கு சவேரியார் ....

- தொடர் 19ம் பக்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# தமிழ்க் கிறிஸ்தவ இலக்கியங்கள்

ரூபி வலன்ரீனா பிரான்சிஸ்
முதுநிலை விரிவுரையாளர், மொழித்துறை,
கிழக்குப் பல்கலைக்கழகம்

## இரட்சணிய மனோகரம்

எச்.ஏ. கிருஷ்ணபிள்ளையால் (1827 – 1900) இயற்றப்பட்ட மற்றுமொரு நூல் **"இரட்சணிய மனோகரம்"** ஆகும். இந்நூல் 'கிறிஸ்தவத் திருவாசகம்' எனவும் 'மீட்பின் பேரின்ப கீதம்' எனவும் 'கிறிஸ்தவப் பக்திப் பனுவல்' எனவும் அழைக்கப்படும் சிறப்பிற்குரியது. எச்.ஏ. கிருஷ்ணபிள்ளையின் 31 வருட கால பக்தி வாழ்வின் வெளிப்பாடாக இந்நூல் விளங்குகின்றது. இதன் முதற்பதிப்பு கிறிஸ்தவ இலக்கிய சங்கத்தினரால் 1899இல் சென்னையில் வெளியிடப்பட்டது. முதற்பதிப்பில் 34 பதிகங்களும் 566 செய்யுள்களும் இடம்பெற்றிருப்பினும் அதன் இரண்டாவது பதிப்பு ஆசிரியரின் பிற செய்யுள்களையும் சேர்த்து 38 பதிகங்களையும் 750 பாடல்களையும் கொண்டு விரிவுபடுத்தப்பட்டதாய் விளங்குவதைக் காணலாம். இரட்ச ணிய யாத்திரிகத்தில் உள்ள பக்திப் பாடல்கள் சிலவும் இதில் இணைக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பால்ய பிரார்த்தனை தொடக்கம் இரட்சணிய சரிதம் ஈறாக பதிகங்கள் அமைந்துள்ளன. அத்துடன் சூழ்வினைப் படலம், திருவிருந்துப் படலம், ஞானாமிர்த வாக்கியப் படலம், போற்றித் திருஅகவல், இரட்சணிய வாழ்த்து, இரட்சணிய நவநீதம் ஆகியனவும் இறுதிப் பகுதியில் அமைந்துள்ளன.




இரட்சணிய மனோகரம்

முப்பது பதிகங்களுக்கு அவற்றின் பொருளைத் திரட்டித் தரும் பாயிரம் போன்ற இரண்டடிக் கொளுப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. இவை திருக்கோவை யார், புறப்பொருள் வெண்பா மாலை ஆகிய நூல்களின் துறை விளக்கக் கொளுக்களை ஒத்துள்ளன. இந்நூலில் உள்ள பதிகங்களில் குறிப்பிடத்தக்கவை வருமாறு:
நல்மனச்சாட்சி (வேதசத்தியத்தை அறிந்த ஒருவரது மனச் சாட்சி தன்னுடன் உரையாடுவதாக இது அமைந்துள்ளது). மரண சிந்தனை, சந்நிதி முறை, தேவ கிருபையின் மாட்சியும் கிருபையும், சுவிசேஷ மாட்சி, வேதியர் ஒழுக்கம், காலைத் துதி, பிழை நினைந்திரங்கல், கையடைப் பதிகம், விசுவாசக் காட்சி. ஆன்ம பிரலாபம், மோட்சக் கடை திறப்பு, விசுவாச மாட்சி என அமைந்து இறுதியில் இரட்சணிய வாழ்த்து உள்ளது. இப் பகுதிகளில் பெரும்பாலானவை இரட்சணிய மனோகரம் என்னும் பெருந் தலைப்பில் 'நற்போதகம்' என்னும் இதழில் பகுதிகளாக வெளிவந்தவை. சில பாடல்கள் இரட்சணிய யாத்திரிகத்தில் இருந்து எடுக்கப்பட்டு இதில் தொகுக்கப்பட்டிருக்கின்றன.
இரட்சணிய மனோகரப் பாடல்கள் உருக்கம் நிறைந்தனவாய் உள்ளன. இவற்றை இசையுடன் பாடினால் மனமுருகி இயேசுவின்பால் அன்பு பெருகுமென முகவுரையில் இந்நூலின் ஆசிரியர் கூறியுள்ளார். இரட்சணிய யாத்திரிகத்தினைப் போலவே இந்நூலிலும் இந்துமத தேவார, பாசுரங்களின் செல்வாக்கைக் காணமுடியும்.

'ஆன்ம பிரலாபம்' என்னும் பகுதி பரமான்மாவிற்கும் ஜீவான்மாவிற்கும் (பக்தன் – கடவுள்) இடையிலுள்ள தொடர்பை உணர்த்தும் வகையில் அமைந்துள்ளது. அகப் பொருள் இலக்கணத்தைத் தழுவி இவை பாடப்பட்டுள்ளமை திருக்கோவையாரையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தாயுமானவரின் பைங்கிளிக் கண்ணியையும் நினைவூட்டுகின்றன. சந்நிதி முறை என்னும் பகுதியும் தாயுமானவரின் பாடல்களை நினைவூட்டுகின்றது.

'பால்ய பிரார்த்தனை' 1860 இன் பின்னர் பாடப்பட்டது. புலவர் தனது மூத்த மகன் (தியாகராசபிள்ளை: இவர் 1863இல் பிறந்தவர்) சிறு பருவத்தினனாக இருந்த போது அவனை முன்னிறுத்தி பாலப் பருவத்தினருக்குச் சிறு பருவத்திலேயே இறைபற்றை உருவாக்குவதற்காக இதனைப் பாடினார் என்பதை அறியமுடிகின்றது. பாடல்கள் ஈரடிகளாலானவை. பிள்ளைகள் மனப்பாடம் செய்வதற்கு இலகுவான முறையில் அமைந்துள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது. இறைவனைப் பற்றியறியவும் கிறிஸ்தவ விசுவாசத்தில் ஊன்றி நிலைக்கவும் இதனைப் பாடினார்.

கடவுள் வணக்கம், செபமாலை முதலான பிரிவுகளும் இப்பகுதியில் அடங்கியுள்ளன. இவற்றிலிருந்து சில பாடல்களை உதாரணமாகக் குறிப்பிடலாம்:

பத்தியாய்ச் செபம் பண்ணவே
சுத்தமாய்த் தெரியாதய்யா
புத்தியோடுமைப் போற்ற நற்
சித்தமீந்திடும் யேசுவே

பாவ பாதையை விட்டு நான்
ஜீவ பாதையிற் சேர - நல்
ஆவி தந்தெனை ஆட்கொள்ளும்
தேவ தேவ குமாரனே

மெய்ம்மையாக விளங்கிடும்
தெய்வம் நீயலதில்லையே
ஐயனே உன் அடைக்கலம்
கைவிடாதெனைக் காப்பையே

இந்தநாளில் எப் பாவமும்
சிந்தையாலும் செய்யாமலே
முந்தவுன் அருள்தந்து கா
வந்தனம் மனுவேலனே!

இறைவனை நினைந்து ஜெபம் செய்யவும் அவரைப் போற்றித் துதிக்கவும் வரம் வேண்டுவதுடன் தூய ஆவியின் வல்லமையைப் பொழிந்து நல்வழி சேரவும் சிந்தை, சொல், செயல் ஆகியவற்றால் பாவம் செய்யாதிருக்கவும் அருள் செய்யுமாறும் வேண்டுவனவாய் இப்பாடல்கள் அமைந்துள்ளன.

ஏனைய பதிகங்களும் கிறிஸ்துவின் பெருமைகளை விளக்குவனவாகவும் சத்திய வேதத்தை விளக்குவனவாகவும் அமைந்துள்ளன.

பின்வரும் பாடல் கிறிஸ்துவின் பெருமைகளைக் கூறி அவரை வாழ்த்தி அமைவது:

தீயநரகக் கதவடைத்ததார்? அடைபட்ட
செப்பரிய மோட்ச கதியின்
செம்பொற் கபாடம் திறந்ததார்? நரரெலாம்
தீவினைக் காளாகவே
மாயம் புரிந்த சண்டாளப் பசாசனை
மடித்ததார்? நன்றியறியா
மாபாவிகட் கென்றும் அழியாத பேரின்ப
வாழ்வருள ஏழை மனுவாய்
நேயமோடு உதித்துநன்னெறியை உபதேசித்து
நீசர்கட்காய்ப் பிணை சொலி
நின்றதார்? வருதேவ நீதியின் தண்டனையை
நேர்ந்தரிய பாடடைந்து ஐங்
காயம் படச் சிலுவை மீது பிராணத்தியா
கம் செய்ததார் கொல்? அந்தக்
கருணாகரன் தனிரு சரணாரவிந்த மலர்
கருதி அஞ்சலி செய்குவாம்

இதில் கிறிஸ்து செய்த அருங்காரியங்களை வினா அமைப்பில் வெளிப்படுத்திச் சிறப்பித்துள்ளார் புலவர். அதாவது, முதல் மனிதனான ஆதாமின் பாவத்தால் அடைக்கப்பட்ட மோட்சக் கதவைத் திறந்தது யார்? பாவம் தந்த பரிசாகத் திறக்கப்பட்ட நரகத்தின் கதவை அடைத்தது யார்? மாயம் புரிந்து மனிதரை ஏமாற்றிய பசாசினை அடக்கியது யார்? இத்தனை நன்மை செய்தும் நன்றி கெட்டு பாவத்திலேயே வீழ்ந்து கிடக்கும் மக்களுக்கு அழியாத பேரின்ப வாழ்வினை அளிப்பதற்காக மனுவுரு எடுத்துப் பூமியில் அவதரித்து நன்னெறியை உபதேசித்து பாவிகள் அனைவரினதும் பாவங்களுக்காகத் தானே பிணையாக →



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நின்று ஐந்து காயங்கள் பட்டு சிலுவையில் அறையப்பட்டு உயிர்த்தியாகம் செய்தவர் யார்? என வினாவெழுப்பி இத்தனை நன்மைகள் செய்த அந்தக் கருணைக் கடலான இயேசுக் கிறிஸ்துவின் பாதாரவிந்தங்களை அஞ்சலி செய்வோம் என அந்தப் பாடல் முடிவுறுகின்றது.

- தொடரும்...

## - மாணவர் பக்கம்...

... இங்கு வந்தார். இதன் பின்னரே முறையான மறை பரப்புப் பணி ஆரம்பமானது. பலர் கிறிஸ்தவத்தை தழுவிக் கொண்டனர். இவர்கள் மேற்கத்தேய அல்லது உரோமைய அல்லது இலத்தீன் திருச்சபையினர் என்ற ழைக்கப்பட்டனர். 1577ல் புகழ்மிக்க றொபேர்ட் தே நோபிலி என்ற இயேசு சபைக் குருவும் இவர்களுடன் இணைந்து கொண்டார்.

இவ்வாறு இந்தியாவிலே பரப்பப்பட்ட கிறிஸ்தவமானது, இன்று கத்தோலிக்க திருச்சபையில் மூன்று தனிப்பட்ட திருச்சபைகளாய் அங்கம் வகிக்கின்றது.

# தேவை ஒரு முகமூடி

முகத்திலிருந்து அகற்ற முடியாதபடி
சாகும்வரை உடனிருந்து
உலுத்தருடன் கைகுலுக்கிப்
பல்லிளிக்கும் முகமூடியொன்று

பல்லிளித்த பொய்யே அதன்
தாய்மொழியாய் இருக்கவேண்டும்
இது நியந்தனை –

உண்மைக்குத் திரையிட்டு
ஒத்திகைகளால் வடிவமைக்கப்பட்ட
உலகின் மாபெரும் கொடையான
அது எப்படிப் பொய்யுரைக்குமென்ற கேள்விக்கு
அதனிடம் ஒரு பெரிய
பாடத்திட்டமே பதிவாயிருக்கவேண்டும்

கிழிந்து சீழ்வடியும்
இதயங்களில் கசியும்
போலிப்புன்னகையை
ஆயிரங்கோடி நுட்பங்களால்
வடிவமைத்த அதன்
உதடுகள் உச்சரிக்கவேண்டும்

என் பெருமூச்சுகளை
எண்ணிக் கணக்கெடுக்கும் விதத்தில்
பூமியேன் மாறக்கூடாது.....?

'கருவிளம் கூவிளம்' புரியாக்
கூழ்முட்டைகளுடன் நானிங்கு
முகமூடி அணியும் வரையாவது
அது என்னைப் பார்த்துக்கொள்ளட்டும்
காலத்துக்கேற்ற அவகாசத்தோடு
தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும்
முகமூடி ஒன்றிருந்தால் தாருங்கள்
நீங்கள் விரும்புவதுபோல்
"கோயபல்ஸ்" என்றதற்குப் பெயரிடுவேன்.

கடவுளே!
தூரத்திலிருந்தே உன்
உஷ்ணத்தை ரசிக்கிறேன்
உனக்கருகிலிருந்து
கருகிப்போனவர்களின்
காலடிகளின் கீழ்
இழிவாய்க் கிடக்கிறது மண்

கைமாறிக் கொண்டிருக்கின்றன
முகமூடிகள் – வெட்கங்கெட்டு

■ ஆ.கு.பாய்வா

குறிப்பு : ஹிட்லரின் பொய்களைச் சொன்ன அவன் மந்திரி -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஈழத்தின் புகழ் பூத்த பன்மொழி அறிஞர் தவத்திரு கலாநிதி தாவீது அடிகள்



## (Rev. Dr. H.S. David Linguist and Polymath)

தமிழ் மொழியின் தகைமைசால் சிறப்பைத் தமிழினம் கருதிடாக் காலத்தில் **"நம்மொழியின் சான்ற சிறப்பைத் தமிழ் மக்களே இனி இனிய முழுவதூஉம் உணர்மின்"** என வீர முரசு அறைந்து தமிழ் மக்களைத் தட்டி எழுப்பிய பெருமை ஒப்பியல் அகராதியின் ஒப்பற்ற மேதை தவத்திரு கலாநிதி ஹயசிந்து சிங்கராயர் தாவீது அடிகளைச் சாரும்.

பருத்தித்துறையில் தும்பளைக் கிராமத்தில் மாவச்சை என்னும் வளவில் 1907.06.28 இல் பிறந்த இவர், தனது கல்வியை யாழ். சம்பத்திரிசியார் கல்லூரியில் ஆரம்பித்து உயர்நிலைக் கல்வியை முடித்தார்.

இவர் கருவிலே திருவுடையராக விளங்கியபடியால் "என்னைப் பின்பற்றி வா" (மத் 9:9) என்ற இயேசுவின் அருளுரையால் ஆட்கொள்ளப்பட்டு கொழும்பு புனித பேணாட் குருத்துவக் கல்லூரியில் பயிற்சிபெற்று, 1931.12.19 இல் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

**ஆளுமை: (Personality)**

எழில்மிக்க செவ்விளநீர் நிறம், புன்னகை பூத்துப் பொலிவோடு விளங்கும் முகம், ஞானக்குறியாகத் தோன்றும் வெண்ணிறக் குறுந்தாடி, அறிவொளி அவாவும் கண்கள், எடுப்பான சவரிய மூக்கு, ஈகையில் வள்ளல், பாரியை மிஞ்சும் கரங்கள், உருவத்தில் குறுமுனி அகத்தியர், நெப்போலியன் போன்று அபூர்வ ஞாபகசக்திமிக்கவர். நேரத்தை உயிர்போன்று செயலுருப்படுத்தியவர். ஒழுங்கும், சிக்கனமும் இவருக்கு இரு கண்கள் போன்றவை. மனித கணினியாகவும், நுண்ணறிவு மிக்க நடமாடும் பல்கலைக்கழகமாகவும் திகழ்ந்தவர். துறவியின் இடது கரத்தில் 'ரெனிஸ்' வீரனைப் பிரதிபலிக்கும் 'றக்கெட்', வலது கரத்தில் உத்தம மரியாளின் வீரவாளாகிய திருச்செபமாலை. ஒருமுறை பார்த்தாலே நெஞ்சில் நிறைந்திடும் தோற்றப் பொலிவு. உந்துசக்திமிக்க ஆளுமை (Dynamic Personality). இவற்றின் ஒட்டுமொத்தமே தாவீது அடிகள் என்பது வெள்ளிடைமலை.

**குணக்குன்று : (Magnificent Charactor)**

இருபதாம் நூற்றாண்டிலே பூமியில் மானிட, வானவ, தேவதையாகத் திகழ்ந்த அன்னை திரேசாவைப் போல, தாவீது அடிகள் எளிமையும் தாழ்மையும் நிறைந்தவர். மனித நேயத்தின் இலக்கணமே இவர். ஆண்டவரின் அன்பைப் பகிர்ந்தளித்தவர். "ஒன்றே குலம், ஒருவனே தேவன்" என்பவற்றைக் கடைப்பிடித்த செம்மல். நாம் கண்ட நவீன சோக்கிறற்றீஸ். கடுகளவு கதைத்து மலையளவு பெரும்பணியாற்றிய பெருமகனார். ஏழை மாணவர்களின் கண்ணீரிலே துன்புறும் இயேசு

**பிரான்சிஸ் சென். றோச் (அரை ஆரோக்கியதாசன்)**
B.A. (Cey), Sp.Trd.T.M., Dip-in-Edu)
**முன்னாள் பிரதி அதிபர் பலாலி, ஆசிரிய கலாசாலை.**
**உபதலைவர் - O.B.A. (S.P.C)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வைக் கண்டார். வீதியோரங்களில் வேதனைப்படும் கைவிடப்பட்ட மனித உள்ளங்களைக் கட்டி அரவணைத்து மோந்து முத்தமிடும் பழக்கமும், வஞ்சகமில்லாத பிஞ்சுக் குழந்தை உள்ளமும் கொண்டவர். பல்லாயிரக்கணக்கான ஏழை மாணவர்களின் வாழ்வு ஒளிமயமாகத் திகழச் சுயநலமின்றி அருளையும் பொருளையும் மனமகிழ்வுடன் வாரி வழங்கினார். நம் வாழ்வில் கண்ட புனிதர் தாவீது அடிகள்.

**கல்விச் சாதனை : (Academic Achievement)**

இவர் இலண்டன் பல்கலைக்கழக கலை மாணிப் பட்டத்துடன் முதுமாணிப் பட்டத்தினையும், கலா நிதிப் பட்டத்தினையும் பெற்றுக்கொண்ட ஒரு மாபெரும் கல்விமான்.

**ஆசிரியர் பணி : (1936-1967)**

தாவீது அடிகள் புனித பத்திரிசியார் கல்லூரியில் 31 ஆண்டுகள் பணிபுரிந்து சிறந்த அறிஞர்களை உருவாக்கியுள்ளார்.

**ஆராய்ச்சி ஒரு மைல்கல் : (A mile stone in Research Work)**

**"கருவறை தொடக்கம் கல்லறை வரை கற்க"** என்பதற்குச் சான்றாகத் திகழ்ந்தவர் தாவீது அடிகள் என்றால் அது மிகையாகாது.

நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் தான் தொடங்கிய சொற்பிறப்பு ஒப்பியல் அகராதியின் வேலை முற்றுப்பெறமுன் 1947.01.22இல் மறைந்துவிட்டார். இவரின் சீடரே தாவீது அடிகள்.


**"விதியே விதியே தமிழ்ச் சாதியை என் செயக்கருதி இருக்கின்றாயடா"** என்று பொங்கினான் பாரதி. ஆம் அந்தத் துர்ப்பாக்கிய நிலையில்தான் ஒப்பியல் அகராதி இருந்தது. அதை நிவர்த்தி செய்ய அடிகளார் சொற்பிறப்பியல் துறையில் ஆய்வுகளை மேற்கொண்டார். ஒரு பூரண பல்கலைக்கழகம் ஆற்றவேண்டிய பாரிய பணியை பண வலிமை குன்றியிருந்தும், மனவலிமை குன்றாமல் குருவாகவும், முழுநேர ஆசிரியராகவும் ஆற்றிக்கொண்டே பல வருடங்களாக மொழி ஆராய்ச்சியில் கடினமாக உழைத்தார்.

ஒப்பியல்
அகராதியில்
ஒன்பதாவது பகுதியை
சிங்கள மொழியில்
தாவீது அடிகள்
எழுதத் திட்டமிட்டார்.
இதனால் தேசிய
ஒருமைப்பாடு
உருவாகும் என
உணர்ந்து
உழைத்த
உத்தமராவார்.
"தொல்திராவிடம்"
அன்றேல் சீரிய சிறந்த
(தமிழ்) மொழியை விளக்கிச்
சாதனை நிலைநாட்டிய
மாமேதை இவர். அவை
மட்டுமல்லாது, சிங்களம்
தமிழின் தங்கை என்று
ஆதாரபூர்வத்துடன்
நிரூபித்துக் காட்டிய முதல் அறிஞர்
தாவீது அடிகள்.

கி.மு.100ஆம் ஆண்டளவில் தோன்றிய கலித்தொகை, குறுந்தொகை போன்ற நூல்களில் வரும் 'யாழ்' என்ற சொற்கள் காதலன் காதலியை, தோழன் தோழியை அழைப்பதாக வருகின்றது என்றும், எனவே தமிழ் 'யாழ்' என்ற சொல்லிலிருந்தே சிங்கள யாழுவ (Yaaluva) பிறந்தது என்றும் இங்ஙனம் 4000 பதங்கள் சிங்களத்திற்கும், தமிழிற்கும் பொதுவானவை என்பதை அறிஞரும் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் ஆதாரத்துடன் எடுத்துக்காட்டியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



**யாழ். நூலகமும் தாவீது அடிகளும் :**

1981.06.01 நடு இரவில் அப்போதுள்ள யாழ். நூலகம் விலைமதிப்பற்ற 97000 நூல்களுடன் தீக்கிரை யாக்கப்பட்டது. யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரி மேன்மாடிக் கட்டிடத்திலுள்ள மேற்குப் பக்க அறையில் வாழ்ந்து கொண்டிருந்த 74 வயதுடைய தாவீது அடிகள் இதனைக் கண்ணுற்றதும் பேரதிர்ச்சியினால் உயிர் துறந்தார். யாழ். நூலகத்தை உருவாக்கினாலும், நடமாடிய பல்கலைக்கழக மாகிய தாவீது அடிகளை யாரால் உருவாக்க முடியும்?

**எம் பணி : (Our Obligation)**

பிதாலோங், தாவீது அடிகள் ஆகிய பேரறிஞர்க ளின் ஆன்மா சாந்திபெற, யாழ். நூலகம் உயிரூட்டம் பெற இலங்கை அரசும், தமிழ் மக்களும் பங்கெடுப்பது முக்கிய கடமையாகும்.

யாழ்.நூலகத்தில் ஒரு பகுதியில் தமிழ் ஆய்வகம் உருவாக்கப்பட்டு, நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர், கலாநிதி தாவீது அடிகள், தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் ஆகியோரின் சகல ஆய்வு நூல்களும், ஏனைய அறிஞர்க ளின் ஆய்வுக்குரிய நூல்களும் இடம்பெறச் செய்வதனால் தாவீதின் பணி தொடர வழி பிறக்கும்.

தேசிய ஒருமைப்பாட்டிற்கு உழைத்துப் பலியான தாவீது அடிகளைக் கௌரவித்து அரசு முத்திரை வெளியிட வேண்டும். யாழ். பல்கலைக்கழகம் புத்தி ஜீவிகளின் குழு மூலம் சொற்பிறப்பு ஒப்பியல் அகராதி முற்றுப்பெற வழிசெய் வது தமிழ் அன்னைக்குச் செய்யும் முக்கிய பணியாகும்.

**உண்மை, நீதி, சமாதானம் மலர்க!**

**- நரிக்கதைகள் ......**

இவ்வாறு, நரிகளின் தந்திரங்கள் யாவும் தோற்றுப்போன ஒரு நள்ளிரவில்

“நரி வனத்தில் மட்டுமல்ல, பனி வனத்திலும் எமக்கு விமோசனமுண்டு”

என்று வன மெங்கும் எழுதிவைத்து விட்டு மிருகங்கள் காணாமல் போயின. நரி வனம் பாலை வனமானது. காலங்காலமாகப் பெருமை பேசிய வனம் சிதறிச் சின்னா பின்னமானது.

அதிர்ந்தன நரிகள். தங்கள் அதிகா ரத்தைச் செலுத்தவோ, பிச்சையெடுத்து உணவு தரவோ, தங்களை மதிப்பதற்கோ யாருமற்று நாதியற்ற நரிகள் பல, தங்கள் தங்கள் ருத்ராட்சங்களில் பிணங்களாய்த் தொங்கியதாகவும், ஆங்காங்கே மரக்கிளை எில் தொங்கிய ருத்ராட்சங்களை வானரங் கள் அணிந்து திரிந்ததாகவும் பேசிக் கொண்டது காற்று.

“விமுக்தியென்பது வேறொன்றுமல்ல, அவனவன் சத்திய தரிசனத்தின் விளைவே....” என யுகயுகாந்திரங்களின் சலசலப்பால் உணர்த்திக்கொண்டிருந்தன நீரோடைகள்.

சிறுகாற்றின் உரசலிலும் தீப்பற்றிக் கொள்ளும் அபாயத்தில் உறைந்துகிடந்தது காடு.

ஆளரவமற்ற காட்டுக்குப் பேரரசனா வது எப்போதென்கிற நீண்ட விசாரத்தில் மூழ்கிக் கிடந்தது கிழட்டுச் சிங்கம்.

நரிவனம் பற்றி யாரோ உரைத்த தீர்க்கதரிசனங்கள் வரிக்குவரி நிறைவேறின.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# அச்சுவாகனம் ஏறிய முதல் தமிழ் நூல்களை தேடிக்கண்டுபிடித்து வெளிப்படுத்தியவர் தனிநாயகம் அடிகளார்


## - தமிழ் ஆவண மாநாட்டில் அருட்திரு தமிழ் நேசன்

தமிழில் அச்சேறிய முதல் நூல்கள் சுமார் 400 ஆண்டுகளாக மறைந்து கிடந்த சூழ்நிலையில் தனிநாயகம் அடிகளார் அவற்றைத் தேடும் முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டார். ஐரோப்பிய அமெரிக்க நாடுகளுக்குச் சென்ற போதெல்லாம் அந்நாடுகளில் உள்ள நூலகங்களுக்குச் சென்று இத்தமிழ் நூல்களைத் தேடுவதை வழக்கமாகக் கொண்டார். அம்முயற்சியில் அவர் வெற்றிபெற்று மறைந்து கிடந்த பல நூல்களைத் தமிழ் உலகிற்கு அறிமுகப்படுத்தினார். அவருடைய இந்த முயற்சி தமிழாய்வுத் தளத்தில் மிக முக்கியமான பங்களிப்பாகும் என அருட்திரு தமிழ் நேசன் அடிகளார் குறிப்பிட்டார்.

கடந்த (ஏப்ரல்) 27ஆம் 28ஆம் திகதிகளில் நூலக நிறுவனத்தினால் கொழும்பில் நடத்தப்பட்ட தமிழ் ஆவண மாநாட்டின் இரண்டாம் நாள் அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே தமிழ் நேசன் அடிகளார் இவ்வாறு தெரிவித்தார்.

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் இடம்பெற்ற இம்மாநாட்டில் பேராசிரியர் சி. தில்லைநாதன் தலைமையில் இடம்பெற்ற 'தமிழ் மொழியும் இலக்கியமும்' என்ற அரங்கில் 'தமிழில் அச்சேறிய முதல் நூல்களும் அவற்றைக் கண்டுபிடித்த தனிநாயகம் அடிகளாரின் பெருமுயற்சியும்' என்ற தலைப்பில் ஆய்வுக்கட்டுரை சமர்ப்பித்து உரையாற்றும்போதே தமிழ் நேசன் அடிகளார் இவ்வாறு தெரிவித்தார். இந்த அரங்கில் உரையாற்றிய அடிகளார் தொடர்ந்து கூறியதாவது,

பதினாறாம் நூற்றாண்டிலும் அதன் பின்னரும் தமிழகத்தில் சமயப் பணியாற்ற வந்த மேனாட்டு கிறிஸ்தவ அறிஞர் சிலர் இயற்றிய நூல்கள் கால வெள்ளத்தில் காணாமல் போய்விட்டன. மறைந்து கிடந்த இத்தமிழ் நூல்களை வெளிநாட்டு நூலகங்களில் தனிநாயகம் அடிகளார் தேடிக் கண்டுபிடித்தார்.



ஆய்வாளர்கள் மேடையில் அமர்ந்திருக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

முதன் முதலில் ஐரோப்பியர் ஒருவரால் தமிழ்த்துறையில் எழுதப்பெற்ற நூலாகக் கருதப்படும் 'தமிழ் மொழி இலக்கணக் கலை' என்ற கையெழுத்துப்பிரதி (1550ஆம் ஆண்டு) உலகளாவிய ரீதியில் முதன் முதலில் தமிழ் மொழியில் அச்சேறிய நூலாகக் கருதப்படும் 'கார்த்தில்லா' (1554ஆம் ஆண்டு), முதன் முதலில் இந்தியாவில் அச்சேறிய தமிழ் நூல்களாகக் கருதப்படும் 'தம்பிரான் வணக்கம்' (1578ஆம் ஆண்டு) மற்றும் 'கிரித்தியானி வணக்கம்' (1579ஆம் ஆண்டு), முதன் முதலில் தமிழ் நாட்டில் அச்சேறிய தமிழ் நூலாகக் கருதப்படும் 'வுளஸ் சங்ரோறும்' (1586ஆம் ஆண்டு) போன்ற வரலாற்று முக்கியத்துவமிக்க நூல்களையே தனிநாயகம் அடிகளார் தனது தமிழ்த்தூதுப் பயணங்களின் போது வெளிநாட்டு நூலகங்களில் கண்டு பிடித்தார்.



தமிழ் நேசன் அடிகளார் ஆய்வுக் கட்டுரை சமர்ப்பித்து உரையாற்றுகின்றார்



தமிழ்ப்பேராசிரியர் சி. தில்லைநாதன் அவர்கள் தலைமை உரையாற்றுகின்றார்.

பதினாறாம் நூற்றாண்டின் தமிழ் நடை, அச்சுக்கலை, மேனாட்டு தமிழ் அறிஞர்களின் அரிய முயற்சிகள் போன்றவை பற்றிய பல உண்மைகளை தமிழுலகம் உணர தனிநாயகம் அடிகளாரின் இம்முயற்சி பேருதவியாக அமைந்தது என தமிழ் நேசன் அடிகளார் தெரிவித்தார்.



## தமிழ் ஆவண மகாநாட்டில் தொண்டன், வெட்டாப்பு இதழ்கள்

**நூ**லகநிறுவனம் (*Noolaham Foundation*) தமிழ் ஆவண மகா நாட்டினை (*Tamil Documentation Conference – 2013*) கடந்த ஏப்ரல் மாதம் 27ம் 28ம் திகதிகளில் கொழும்பு தமிழ்ச்சங்க மண்டபத்தில் நடத்தியது. இம் மகாநாட்டில் **திருமதி. றூபி வலன்ரீனா பிரான்சிஸ்** "கிழக்கிலங்கை கிறிஸ்தவ இதழ்கள் - தொண்டன், வெட்டாப்பு என்பன குறித்த சிறப்பு ஆய்வு" என்னும் தலைப்பில் ஆய்வுக் கட்டுரையினைச் சமர்ப்பித்து உரையாற்றினார்.

28ம் திகதி நடைபெற்ற 'தமிழ்மொழியும் இலக்கியமும்' என்னும் ஆய்வரங்கில் பேராசிரியர் சி.தில்லைநாதன் அவர்களின் தலைமையில் இக்கட்டுரை சமர்ப்பிக்கப்பட்டது.

கிழக்குப்பல்கலைக்கழக மொழித்துறை முதுநிலை விரிவுரையாளரான **திருமதி. றூபி வலன்ரீனா பிரான்சிஸ்** மட்டக்களப்பு இருதயபுரம் பங்கினைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

- **தொண்டன்** -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




## ஆனி மாதம் – 2013

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | 1 புனித ஜஸ்டின் புனித மார்டின் |
| 2 ஆண்டவரின் திருவுடல் திருஇரத்த பெருவிழா புனிதர்கள் மார்சலினும்பீற்றரும் | 3 புனித லுவங்கா சாள்சும் தோழர்களும் | 4 புனித பிரான்சிஸ் கறக்சியோலா | 5 புனித பொனிபஸ் | 6 புனித நோபர்ட் | 7 இயேசுவின் திருஇருதயப் பெருவிழா புனித நியூமின்ஸ்டர் றொபர்ட் | 8 புனித மரியாவின் மாசற்ற இருதயம் புனித வில்லியம் புனித மெடார்ட் |
| 9 புனித எபிரேம் | 10 புனித மார்க்கறீற்றா புனித லான்ட்ரி | 11 திருத்தூதரான புனித பர்னபாஸ் | 12 புனித பாகுந் அருளப்பர் புனித கைகோர்ட்டோனா | 13 புனித பதுவை அந்தோனி | 14 புனித மெதோடியஸ் | 15 புனித வீத்து புனித ஜேர்மேன் கொசின் |
| 16 புனித குவிரிக் புனித ஜோன் பிரான்சிஸ் றெஜிஸ் | 17 புனித கிரகறிவார் பெரிகோ புனித ஹார்வே | 18 புனித மார்சலின் புனித கிரகறி பார்பரிகோ | 19 புனித ரோமோல்ட் | 20 புனித சில்வேரியஸ் | 21 புனித அலோசியஸ் கொன்சகா | 22 புனித நோலா பவுலானுஸ் புனித தோமஸ் மூர் புனித ஜோன் பிஷர் |
| 23 புனித எதெல்ரிடா | 24 புனித திருமுழுக்கு யோவானின் பிறப்பு விழா | 25 புனித றெஜிமோ புரொஸ்பர் | 26 புனித யோன் போல் புனித அந்தெல்ம் | 27 புனித அலெக்சாந்திரியா சிரில் | 28 புனித இரேனியுஸ் | 29 திருத்தூதர்களான பேதுரு, பவுல் பெருவிழா |
| 30 உரோமைத் திருச்சபை மறைசாட்சிகள் | | | | | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# புனிதர்களின் வரலாறு



## 1ம் திகதி : புனித ஜஸ்டின்

100ம் ஆண்டிலே பலஸ்தீனாவின் நபுலஸ் எனும் ஊரில் சமய நம்பிக்கையற்ற குடும்பத்தில் பிறந்தவர். மெய்யியலின் பல துறைகளையும் கற்றுமுடித்தபின் முப்பத்து மூன்றாம் வயதிலே கிறிஸ்தவத்திற்கு மாறினார். பின்னர் சின்ன ஆசியாவினதும், உரோம் நகரினதும் இறை விசுவாசத்தைக் காத்துப் பரப்புவதற்குத் தம் வாழ்நாள் அனைத்தையும் அர்ப்பணித்துக்கொண்டார். ஒரு வேதாந்தியின் உடையை வைத்திருந்தாலும் 2ம் நூற்றாண்டின் கிறிஸ்தவர்களுக்கு சொந்தமாக எழுதி வைத்திருந்த வேலைகளுக்குமான முக்கிய பரிந்துரையாளரானார். சக்கரவர்த்தி அன்டோனியசுக்கும் உரோம் சட்ட சபைக்குமிடையில் நடைபெற்ற மன்னிப்புக் கோரலானது கிறிஸ்தவ நீதி மதிப்பீடுகளைத் தெரியவைத்தது. அத்துடன் யூதருக்கு அதன் உண்மையை உரையாடல் வழியாகத் தெரியப்படுத்தவும் உதவியது. அவை அன்று வாழ்ந்த கிறிஸ்தவர்கள் கடைப்பிடித்த விசுவாசத்தின் மதிப்புமிக்க செய்திகளாயின. 165ம் வருடத்திலே, உரோமில் விசுவாசத்திற்குச் சான்று பகர்ந்த வேளையில், இவர் கிறிஸ்தவர் எனக் குற்றஞ்சாட்டப்பட்டார். பொது விவாதங்களில் ஈடுபட்ட ஒரு குறைகாணும் தத்துவஞானியால் இவ்வாறான கருத்து தூண்டிவிடப்பட்டது. எனவே, இவர் கைது செய்யப்பட்டுத் தெய்வங்களுக்குப் பலியிடப்பட வேண்டுமெனவும் தீர்வையிடப்பட்டது. அப்போது, இவர் "சரியான சிந்தனையற்றவனால் பொய்யிடமிருந்து உண்மையைக் காக்கமுடியாது" என்றார். இவருக்காதரவாயிருந்த ஆறுபேரும் இவருடன் வேதசாட்சிகளாயினர்.

## 20ம் திகதி : புனித சில்வேரியஸ்



536ம் வருடத்திலே புனித அகாப்பெட்டசின் மரணத்தின் பின்னர் பாப்பரசராகத் தெரிவுசெய்யப்பட்டார். இந்தத் தேர்வு நடந்த உடனே சக்கரவர்த்தி ஜஸ்டியனின் அதிகாரியும் வெற்றியாளருமான பெலிசரியஸ் கோத்துக்கு எதிரான போரில் ஆட்டங்கண்டு உரோமின் நுழைவாயிலுக்கு முன் நின்றார். பாப்பரசர் சில்வேரியசின் வேண்டுகோளால் சட்டசபை இவரை நகருக்குள் அனுமதித்தது. சக்கரவர்த்தினி தியோடோரா, அக்கப்பேலி எனும் மதப்பிரிவில் ஊன்றியிருந்தார். பாப்பரசரையும் இதில் சேர்க்கக் கடும் பிரயத்தனம்செய்தார். ஆனால், அவரோ இணங்கவில்லை. சக்கரவர்த்தினியோ விஜிலியஸ் எனும் அதிமேற்றாணியாருடன் சேர்ந்து சதிசெய்து, அவர் சல்சிடன் சபையைக் கண்டனஞ் செய்தால், பாப்பரசரின் தலைமைப் பீடத்தைத் தருவதாக வாக்களிக்க அவரும் இணங்கினார். இதன்பின் இவர் பெலிசரியசுக்கு ஒரு கடிதத்தை எடுத்துக் கொண்டு உரோமுக்குச் சென்றார். அக்கடிதத்தில் பாப்பரசர் சில்வேரியசை நீக்கிவிட்டு விஜிலியசைத் தேர்ந்தெடுக்குமாறு கட்டளையிடப்பட்டிருந்தது. சிறிது தாமதித்த அதிகாரி பின் அதற்குப் பணியத் தீர்மானித்தார். அவ்வாறே விஜிலியஸ் பாப்பரசராகவும் ஆவன செய்தார். சக்கரவர்த்தி ஜஸ்டினியன் நாட்டின் உண்மை நிலையைப் புரிந்துகொண்டு சில்வேரியசை உரோமுக்குத் திருப்பியனுப்பக் கட்டளையிட்டார். வழியில் எதிரிகளால் கைப்பற்றப்பட்டு விஜிலியசிடம் ஒப்படைக்கப்பட்டு பால்மரியா தீவுக்கு அனுப்பப்பட்டார். அங்குசென்ற சில நாட்களிலேயே 537ம் வருடம் இறைபதமெய்தினார். இவரது மறைவு எதிர்க்கருத்துடையோருக்கு அனுகூலமாக இருக்கவில்லை என்றே கூறலாம். பின்னர் இவர் புனிதர் வரிசையில் இணைக்கப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சிறுவர்களுக்கு மட்டும்

முடிவுத் திகதி 30.06.2013

பரிசுப் போட்டி

# விவிலியம் கற்போம் - 122

## இணைச்சட்டம் அதிகாரங்கள் 30-31

**(பொருத்தமான சொற்களைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக)**

மோசே இஸ்ராயேலரிடம் "இவையெல்லாம் நிகழும்போது, உன் கடவுள் உன்னைச் சிதறடித்துள்ள மக்களிடையே வாழ்க்கையில் நான் உனக்கு முன்வைத்த ஆசி, சாபம் ஆகியவை பற்றிச் சிந்தனை செய். உன் கடவுளிடம் திரும்பி வா. நீயும் உன் ....................... அவரது குரலுக்குச் செவி கொடுத்தால், உன்னை அடிமைத்தனத்திலிருந்து விடுவிப்பார். உன்னை மீண்டும் கூட்டிச் சேர்ப்பார். உன்னைப் பெருகச் செய்வார். உன் வழிமரபினரின் உள்ளத்தைப் பண்படுத்துவார். உன் கடவுள் மீது நீ முழு இருதயத்தோடும் முழு உள்ளத்தோடும் ....................... கூர்வாய். அப்போது வாழ்வு பெறுவாய். இந்தச் சாபங்களை உன் பகைவர் மீது வரச்செய்வார். என் கட்டளை உனக்குப் புரியாதது இல்லை. விண்ணிலும் இல்லை. கடல்களுக்கு அப்பாலும் இல்லை. உனக்கு மிக அருகில் உள்ளது; உன் வாயில், உன் .......................உள்ளது. இன்று எனக்கு நூற்றிருபது வயது. இனி என்னால் நடமாட முடியாது. மேலும், 'நீ யோர்தானைக் கடக்கமாட்டாய்' என்று ஆண்டவர் கூறியுள்ளார். ஆண்டவர் சொன்னபடி யோசுவா உனக்கு முன் செல்வான். ....................... மன்னர்களான சீகோனுக்கும் ஓகுக்கும் அவர்களின் நாட்டுக்கும் செய்தது போல, அழித்தது போல ஆண்டவர் அவர்களுக்கும் செய்வார். வலிமை பெறு; துணிவுகொள்; அஞ்சாதே, அவர்கள் முன் நடுங்காதே; ஏனெனில் ஆண்டவர் உன்னை விட்டு விலகமாட்டார் ....................... மாட்டார்" என்றார். பின் யோசுவாவை அழைத்து அனைவர் முன்னிலையிலும் இவர்களுக்குக் கொடுப்பதாக ஆண்டவர் கூறிய நாட்டுக்குள், இந்த மக்களோடு நீ செல்ல வேண்டும். ஆண்டவரே உன் முன் செல்வார். அஞ்சாதே, திகைக்காதே" என்றார். பின்னர் ....................... திருச்சட்ட நூலை எழுதி, உடன்படிக்கைப் பேழையைச் சுமக்கும் லேவியின் வழிவந்த குருக்களிடமும் ஒப்படைத்தார். பின்பு அவர், "விடுதலை ஆண்டாகிய ஒவ்வொரு ஏழாம் ஆண்டின் முடிவில் வரும் கூடாரவிழாவில், ஆண்டவர் தேர்ந்துகொள்ளும் இடத்தில், ....................... முன்னிலையில் திருச்சட்ட நூலை வாசியுங்கள். அனைவரும் இவற்றைக் கேட்டு ஆண்டவருக்கு அஞ்சக் கற்றுக்கொள்ளட்டும். இவற்றை என்னிடம் கூறிய ஆண்டவர், "நீ இறக்கும் நாள் நெருங்கிவிட்டது. யோசுவாவைக் கூப்பிடு. இருவரும் .......................கூடாரத்துக்கு வாருங்கள். நான் அவனுக்குப் பணிப் பொறுப்புத் தரவேண்டும்" என்றார். இருவரும் போய் நின்றபோது ஆண்டவர் மேகத்தூணில் தோன்றினார். அப்போது மோசேயிடம் "நீ உன் மூதாதையரோடு துஞ்சப் போகிறாய். இந்த மக்கள் என்னை விட்டு விலகுவர். அப்போது என் ....................... அவர்களுக்கு எதிராகக் கனன்றெரியும். அவர்களைக் கைவிடுவேன். இந்தப் பாடலை எழுதிக்கற்றுக்கொடு" என்றார். அன்றே மோசே பாடலை எழுதிக் கற்றுக்கொடுத்தார். திருச்சட்ட நூலை உடன்படிக்கைப் பேழையின் அருகில் வைக்குமாறு ....................... கொடுத்தார். பின், "நான் உயிரோடு இருந்தபோதே கலகம் செய்யும் நீங்கள் நான் இறந்த பின் என்ன செய்வீர்களோ? நீங்கள் அவருக்குச் சினமூட்டுவீர்கள். ஆகையால், உங்களுக்குத் தீங்கு நேரும் என்பதை நான் அறிவேன்" என்று கூறினார்.

**விடைகள்:** **எமோரியரின், மோசே, இஸ்ரயேலர், சந்திப்பு, சினம், இதயத்தில், லேவியரிடம், அன்பு, கைவிடவும், பிள்ளைகளும்.**

(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும், பிரிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அறிவை வளர்ப்போம் - 122

## பரிசுப் போட்டி




(பொருத்தமான சொற்களின் கீழ் அடிக்கோடிடுக)

1. செஞ்சிலுவைச் சங்க தினம் கொண்டாடப்படும் நாள்
(ஜூன் 08 - மே 15 - மே 08)

2. 'பென்சிலின்' மருந்தைக் கண்டுபிடித்தவர்
(லூயி பாஸ்டர் - அலெக்சாண்டர் பிளமிங் - மேரிகியூரி)

3. ஆகாய விமானம் கண்டுபிடிப்பதற்கு முன்பே பாரசூட்டைப் பற்றிக் கற்பனை செய்த ஓவிய விஞ்ஞானி
(லியனார்டோ டாவின்சி - மைக்கல் ஆஞ்சலோ - பிக்காசோ)

4. அன்னாசி நாரிலிருந்து ஆடை நெய்யும் நாடு
(மலேசியா - இந்தோனேசியா - பிலிப்பைன்ஸ்)

5. 'அற்பனுக்குப் பவிசு வந்தா ..........................'
(அர்த்தராத்திரியில் ஆடை அணிவான் - அர்த்தராத்திரியில் குடை பிடிப்பான் - அர்த்தராத்திரியில் ஆடிப்பாடுவான்)

6. சரியான சொல் இது
(இங்கு தங்கினேன் - இங்கேத் தங்கினேன் - இங்குத் தங்கினேன்)

பெயர் : ..........................................................................................

முகவரி: ..........................................................................................

..........................................................................................

அனுப்பவேண்டிய முகவரி:
விவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம்– 122
தொண்டன்
அ. பெ. எண் – 44
மட்டக்களப்பு.

பரிசு அனுப்பவேண்டிய தபாலகம்:
..............................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# போட்டி முடிவுகள்



## விவிலியம் கற்போம் - 120 விடைகள்

குருவிடம், அரமெயரான, குரல், முதற்பலனை, பத்தில், கட்டளைகளை,
திருச்சட்டத்தினை, யோர்தானை, லேவியர், வார்த்தைகளை

## அறிவை வளர்ப்போம் - 120 விடைகள்

1. டோனி 2. நட்சத்திரம் 3. ஸ்ராபோ 4. தோட்டக்காரி
5. வீக்கம் இருக்கோணும் 6. இரண்டாம் எழுத்து ஒன்றுபட்டு வருவது

## பரிசுகள் - அனுசரணை: அருள்தந்தை. அன்ரனி குரூஸ் CRS

**போட்டியின் இரு பிரிவுகளுக்கும் சரியான விடைகளை எழுதி 300/= பரிசு பெறுவோர்**

- அலோசியஸ் அனிஸ்ராஜ்
  54, கதிர்காமத்தம்பி வீதி,
  வரோதயநகர்,
  திருகோணமலை.
- யோ. மகிமைராஜ்,
  காளிகோயில் வீதி,
  வினாயகபுரம் - 03,
  திருக்கோயில்.

**ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடைகளை எழுதி 200/= பரிசு பெறுவோர்**

- ப. பிரார்த்தனாகுமாரி
  கல்குடா வீதி,
  பேத்தாழை,
  வாழைச்சேனை.
- பு. துஷிந்தராஜ்
  66/1, மாணிக்கப்பிள்ளையார்
  கோயில் வீதி,
  அமிர்தகழி, மட்டக்களப்பு.

## சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 72 முடிவுகள்

- **முதலாம் பரிசு - 400/=**
  மெக்கன்சி ஸ்பெக்,
  பிரதான வீதி,
  வாழைச்சேனை.
- **இரண்டாம் பரிசு - 300/=**
  இ. துசாரிக்கா
  66/1, மாணிக்கப்பிள்ளையார்
  கோயில் வீதி,
  அமிர்தகழி,
  மட்டக்களப்பு.
- **மூன்றாம் பரிசு - 200/=**
  தி. ஏஞ்சல் டானியா,
  இல.08, 2ம் குறுக்கு,
  சகாயபுரம், மாமாங்கம்,
  மட்டக்களப்பு.

போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. (ஆ - ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# காற்றில் கலந்து வரும்....

இலங்கை வானொலி தேசிய சேவையில்

ஜூன் - 2013 **கத்தோலிக்க நிகழ்ச்சிகள் – தமிழ்**

## கத்தோலிக்க நற்சிந்தனைகள் - காலை 5.55 மணி

நாள் : 01, 02, 03, 04 – அருள்தந்தை பிறைனர் செலர்

05, 06, 07 – அருள்தந்தை மதுராங்கன் குரூஸ்

15, 16, 17, 18 – முத்தையா செல்வராணி

19, 20, 21 – பெஸ்லியோ வாஸ்

## புதிய உலகம் (வளர்ந்தோர் நிகழ்ச்சி) - மாலை 7.00 மணி

நாள் : 09, 23

(இறைவார்த்தை வழிபாடு, வேரைத்தேடி, சிந்தனை உரை, விவிலிய நாடகம், உலகத் திருச்சபைச் செய்திகள், பாடல்கள் இன்னும்...)

## சிறுவர் உலகம் (சிறுவர் நிகழ்ச்சி) - மாலை 7.00 மணி

நாள் : 11, 25

(கதையும் கருத்தும், குறு நாடகம், பாப்பா பாடல்கள், கவிதைகள், உருவகக் கதை இன்னும்.....)

நிகழ்ச்சித் தொகுப்பு :

*மலர்வேந்தன்*

தொடர்பு:

சமூகத் தொடர்பு நிலையம்,
அ.பெ. எண் - 44,
மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media